2017 மார்ச் 02
வியாழன்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ஜ.ஆகிர் பிறை 02 | பக்கங்கள் 12 | மணி 03 | ஒளி 036

QD / 154 / NEWS / 2017

NAVAMANI DAILY
නවමණී දිනපතා
# நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்






கலை நுணுக்கங்கள் கொண்ட இஸ்லாமிய கட்டடக்கலை
09 »

இடதுசாரிகள் சரியான பாதையில் பயணிக்கிறார்களா?
04 »

# மூன்று மாதத்துக்குள் உள்ளூராட்சி தேர்தல்



**அரசாங்கத்துக்கு சர்வதேச அழுத்தம்**

**சிறுபான்மையை வென்றெடுக்க திட்டம்**

**முஸ்லிம் தூதுக் குழுவிடம் பஷில்**

இன்னும் மூன்று மாதங்களில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும். இதற்குத் தயாராகுங்கள் இத்தேர்தலில் தமிழ், முஸ்லிம் மக்களது ஆதரவு எமக்கு முக்கியமானது என முன்னாள் அமைச்சர் பஷில் ராஜபக்ஷ நேற்றுக் கூறினார்.

மூன்று மாத காலம் வைத்திய 11 »»»»



கைத்தொழில் வர்த்தக அமைச்சின் கீழான தேசிய அருங்கலைகள் பேரவையின் ஜனாதிபதி விருது வழங்கும் நிகழ்வு (2015/2016) கண்டி பொல்கொல்லையில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கௌரவ விருந்தினராக கைத்தொழில் வர்த்தக அமைச்சர் றிஷாட் பதியுத்தீன், பிரதி அமைச்சர் சம்பிகா பிரேமதாஷ, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர். பேரவையின் தலைவி ஹேஷானி போகொல்லாகம தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர், அரசியல் முக்கியஸ்தர்கள் பலர் பங்குபற்றினர்.

## அரசியலமைப்பினை நிறைவேற்ற சர்வஜன வாக்கெடுப்பு நடாத்துவோம்

அமைச்சரவை பேச்சாளர் ராஜித



அ. அருண் பிரசாந்த்

எத்தரப்பினரது எதிர்ப்புக்கள் வந்தாலும் புதிய அரசியலமைப்பை நிறைவேற்றுவதற்காக சர்வஜன வாக்கெடுப்புக்கு நாம் நிச்சயமாக செல்வோம் என்று அமைச்சரவையின் இணைப்பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரட்ன மீண்டும் அரசின் நிலைப்பாட்டை உறுதிபடத் தெரிவித்தார். 11 »»»»

## அநீதியை விளக்கிக் கூறும் நிந்தவூர் கூட்டம் நாளை



ஹசனலி பங்கேற்பு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் பொதுச் செயலாளர் கலந்துகொள்ளும் பொதுக்கூட்டம் ஒன்று நாளை இரவு நிந்தவூரில் நடைபெறவுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் தனக்குச் செய்த அநீதியை எடுத்துக் கூறுவதற்காகவே 11 »»»»

*வெலிக்கடை சிறையில் 27 பேர் கொலை:*

## மஹிந்த அரசின் திட்டமிட்ட செயல்

அரசாங்கம் நேற்று அறிவிப்பு

அ. அருண் பிரசாந்த்

2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி வெலிக்கடைச் சிறைச்சாலையில் 27 பேர் கொல்லப்பட்ட சம்பவமானது மஹிந்த 11 »»»»




## ரஞ்சனுக்கு கொலை அச்சுறுத்தல்

பொலிஸில் முறைப்பாடு

திவுலப்பிட்டிய பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டத்தின் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 11 »»»»

## காணி, பொலிஸ் அதிகாரங்கள் வடக்குக்கு வழங்கப்பட வேண்டும்



அதற்கு தேசிய கொள்கை அவசியம்

அதுரலிய ரதன தேரர்

ஆதில் அலி சப்ரி

வடபுல மக்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தில் தாம் உடன்படுவதாகவும், அதற்கான தேசிய கொள்கையொன்று அவசியமென்றும் பாராளுமன்ற உறுப்பினர் அதுரலியே ரதன தேரர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் 11 »»»»

## கேப்பாபுலவு மக்களின் போராட்டத்துக்கு வெற்றி




42 ஏக்கர் காணிகளும் விடுவிப்பு

அ. அருண் பிரசாந்த்

கேப்பாப்புலவு, புலவுக் குடியிருப்பு மக்கள் கடந்த ஒருமாத காலமாக இரவு- பகலாக செய்து வந்த போராட்டத்தின் பிரதிப்பலனாக அவர்களுக்குச் சொந்தமான 42 ஏக்கர் காணியும் நேற்று உத்தியோகபூர்வமாக விடுவிக்கப்பட்டது.

இக்காணிகளுக்குள் உட்செல்லும் பிரதான நுழைவாயில் 11 »»»»

## மத்திய வங்கி இரகசிய அறையில் ஆணைக்குழு அங்கத்தவர்கள்

11 »

நம்ம்ம்ம்ப முடியாத IDD ட்ரிபல் போனஸ் தருவது Dialog IDD மட்டுமே



IDD ட்ரிபல் போனஸ் ரூ.198/-க்கு ரூ.600/- IDD
IDD ட்ரிபல் போனஸ் ரூ.598/-க்கு ரூ.1,800/- IDD
IDD ட்ரிபல் போனஸ் ரூ.798/-க்கு ரூ.2,400/- IDD

ரீலோட் மற்றும் கார்ட் மூலம் பெற்றுக்கொள்ளலாம்
மேலதிக விபரங்களுக்கு 1777ஐ அழைக்கவும்

• நிபந்தனைகளுக்கு உட்பட்டது

Dialog
எதிர்காலம் இன்றே.

## ஓய்வூதியச்சங்க வருடாந்த மகாநாடு

(மடவள பஸார் ஏ.எஸ்.ஏ. ருஷ்தி)

பாத்ததும்பறை பிரதேச செயலகப் பிரிவு ஓய்வூதிய நிதியத்தின் 16 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் 7 ஆம் திகதி மு.ப 9.30 மணியளவில் வத்துகாம நகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. சங்கத்தின் தலைவர் எம்.டி மடுகல்ல தலைமையில் நடைபெறும் இப்பொதுக்கூட்டத்துக்கு இச்சங்கத்தின் அங்கத்தவர்கள் 2000 இற்கும் மேற்பட்டவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

## வழிகாட்டல் பயிற்சி முகாம்

குருநாகல் மாவட்ட தமிழ் மொழிப் பாடசாலைகளின் ஒழுக்காற்றுக்குழு மாணவர்களுக்கான வழிகாட்டல் பயிற்சி முகாம் ஒன்றை நடாத்துவதற்கு குருநாகல் மாவட்ட சமூக நல கல்வி அபிவிருத்தி ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

ஒன்றியத்தின் தலைவர் எம். ஏ. ஹாசிம் தலைமையில் எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை வாரியபொல விவசாய பயிற்சி நிலையத்தில் இப் பயிற்சி முகாம் நடைபெறும்.

இதுவரை விண்ணப்பித்துள்ள பாடசாலை மாணவர்களுக்கு மாத்திரம் நடைபெறும் இப்பயிற்சி முகாமில் சுமார் 200பேர் கலந்துகொள்வார்கள். நிகழ்வில் இறுதியில் நடைபெறும் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் வடமேல் மாகாண சபை உறுப்பினர்களான முஹம்மது சஹாப்தீன் ஹாஜியார், சட்டத்தரணி ரிஸ்வி ஜவஹர்ஷா ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொள்வார்கள். அனுபவம் வாய்ந்த நான்கு வளவாளர்களைக் கொண்டு நடாத்தப்படும் இப்பயிற்சி முகாம் ஒன்றியத்தின் கல்வி உப குழுவினால் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## இன்கிலாப் சஞ்சிகை வெளியீடு

(பாறுக் ஷிஹான்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் வெளியீடான இன்கிலாப் சஞ்சிகையின் ஏழாவது மலர் எதிர்வரும் நான்காம் திகதி பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் பிற்பகல் 02.30 மணியளவில் வெளியிடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் கௌரவ அதிதிகளாக தென்கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ், மற்றும் யாழ்பல்கலைக்கழக பீடாதிபதிகள் பேராசிரியர் ரீ.மிகுந்தன், பேராசிரியர் சுதாகரன், கலாநிதி ஏ.அற்புதராஜா, பேராசிரியர் ரீ.வேல்நம்பி, வைத்திய கலாநிதி எஸ் ரவிராஜ், பேராசிரியர். ஆர். விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்வில் முஸ்லிம் மஜ்லிஸ் காப்பாளர் சிரேஸ்ட விரிவுரையாளர் ஏ.ராசகுமாரன் மற்றும் பெரும் பொருளாளர் தொழிநுட்பபீட பீடாதிபதி பேராசிரியர் எஸ். சற்குணராஜா ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளனர். நூல் திறனாய்வை பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் மேற்கொள்ளவுள்ளார். மேலும் இந்நிகழ்வில் விஷேட சொற்பொழிவு, மற்றும் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

## காத்தான்குடி அபிவிருத்திக் குழுக் கூட்டம் மற்றும் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு

(ஆர்.ஹஸன்)

காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவுக்கான பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கு மட்டு.மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத்தலைவரும், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மக்களுக்கான வாழ்வாதார உதவிப் பொருட்கள், வட்டியில்லா கடன் தொகை மற்றும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில்கள் என்பனவும் குறித்த தினம் மு.ப.11 மணிக்கு வழங்கப்படவுள்ளன.

காத்தான்குடி பிரதேச செயலாளர் எஸ்.எச். முஸம்மில் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

உயர்தர மாணவர்களுக்கான 'சிப்தொர புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் 40 மாணவர்கள் மற்றும் க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான சிசுதிரிய' புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் 40 மாணவர்கள் உள்ளடங்களாக மொத்தம் 80 மாணவர்கள் இந்நிகழ்வின் போது புலமைப் பரிசில் பெற்றுக்கொள்ளவுள்ளனர். அத்துடன், 42 பயனாளிகளுக்கு வட்டியில்லா கடன் தொகையும், 8 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிப் பொருட்களும் இதன்போது வழங்கப்படவுள்ளன.

# தொழிற்சந்தைக்கு ஏற்ற வகையில் கல்வித்துறையை தேர்ந்தெடுங்கள்

## கோட்டக் கல்விப் பணிப்பாளர் என். குணலிங்கம்

(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

எந்தவொரு நாட்டிலும் அரசாங்கத்தால் அனைத்துப் பட்டதாரிகளுக்கும் வேலை வாய்ப்பினை வழங்கிவிட முடியாது. இலகுவில் தொழில் பெற்றுக்கொள்ளக் கூடிய உயர்கல்வியை மாணவர்கள் தெரிவு செய்து கொள்ள வேண்டும் என மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்தின் கோட்டக் கல்விப் பணிப்பாளர் என். குணலிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, கல்குடா கல்வி வலயத்திலுள்ள கோரகல்லிமடு ஸ்ரீ ரமண மகரிஷி வித்தியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் அவர் அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

சமீப சில நாட்களாக மட்டக்களப்பு நகரில் பட்டதாரிகளால் ஒரு சத்தியாக்கிரகப் போராட்டம் நடாத்தப்பட்டு வருகின்றது. மட்டக்களப்பில் தொழில் வழங்கக் கோரி நிற்கும் சுமார் 1500 பட்டதாரிகளில் 1200 பேர் கலைப் பட்டதாரிகளாகத்தான் இருப்பார்கள் என நான் கருதுகின்றேன்.வேலைவாய்ப்புத் துறையில் தற்போது கலைப் பட்டதாரிகளுக்கு இருக்கின்ற கேள்வி மிகவும் குறைவானது.





அந்த வகையிலே இவ்வாறான பட்டதாரிகள் ஆசிரியர்களாக அல்லது எழுதுவினைஞர்களாக மாத்திரம்தான் செயற்பட முடியும் என்கின்ற நிலையிலே எங்களுடைய பட்டங்களும் படிப்பின் பெறுமதியும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது.அதற்காகத்தான் அரசாங்கம் கல்விக் கொள்கையிலே மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கின்றது. கல்வி கற்கும்போது பாடசாலை மாணவர்கள் கல்வியை ஒரு குறிக்கோளுடன் கற்க வேண்டும்.இப்பொழுது கல்வியிலே நாங்கள் தெரிவு செய்யும் துறையினை தவறான முறையில் தெரிவு செய்து விடுகின்றோம்.இதற்கு சரியான பாதையை ஆசிரியர்களும் பெற்றோர்களும் கல்வியியலாளர்களும் வழிகாட்ட வேண்டும்.

குறிப்பாக எமக்கு நான்கு பிரதான துறைகளாக கலை, விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் உயிரியல் ஆகியவையே இருந்தது. இப்போது ஐந்தாவதாக தொழில்நுட்பத் துறையை உள்வாங்கியுள்ளனர். அதிலும் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. கொழும்பிலிருக்கின்ற பல்வேறு கம்பனிகளிலே அதிகளவான பதவி வெற்றிடங்கள் உள்ளன. ஏனெனில், அப்பதவிகளுக்கு கலைப் பட்டதாரிகள் தெரிவுசெய்த பாடத் துறைகள் பொருத்தமானதாக இல்லை.எனவேதான் நமது மாணவர்கள் தமது தற்போதுள்ள தொழில் சந்தைக்கு ஏற்ற வகையில் கல்வித் துறையினை தெரிவு செய்து கொள்ள வேண்டும்.மேலும், எந்தவொரு நாட்டிலும் அரசாங்கத்தால் முழுமையாக பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பினை வழங்கிவிட முடியாது.

இது அமெரிக்காவாக இருக்கலாம் ஏனைய அபிவிருத்தியடைந்த நாடாக இருக்கலாம் நிறை தொழில் மட்டம் என்பதை எதிர்பார்க்க முடியாது. ஏறக்குறைய ஐந்து தொடக்கம் எட்டு வரையில் வேலையின்மை வீதம் உலகின் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலே சாதாரணமானதொரு விடயமாக இருக்கின்றது.

இருப்பினும் நாங்கள் சிறப்பாகக் கற்றுக் கொண்ட அல்லது தெரிவு செய்த துறைகளுக்கு ஏற்ப வேலை வாய்ப்பினை இலகுவாக பெற்றுக் கொள்ள முடியும் என்றார்.



இந்தியா வுக்கான இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பயிஸர் முஸ்தபா பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சர் மேனகா காந்தியை சந்தித்து கலந்துரையாடினார். இதன் போது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்ற கால்நடை நலன்புரி வேலைத்திட்டம் தொடர்பில் கால்நடை நலன்புரியில் விசேட கவனம் எடுக்கின்ற அமைச்சர் மேனகா தனது கருத்துக்களை தெரிவித்தார்.

# புத்தாண்டில் நல்லாட்சி கவிழ்ந்து மஹிந்தவின் மக்களாட்சி மலரும்

## பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்த்தன

(பேருவளை பி.எம் முக்தார்)

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டின் பின்னர் இந்த நல்லாட்சி அரசை நாம் கவிழ்ப்போம். மிகவிரைவில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசொன்றை ஏற்படுத்துவோம் என களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்தன கூறினார்.வாத்துவை பின்வத்த பகுதியில் இடம் பெற்ற கூட்டுஎதிரணியின் கூட்டமொன்றில் பேசும் போது அவர் இவ்வாறுதெரிவித்தார்.

முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சுஜித் சில்வாதலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது மார்ச் 8ஆம் திகதி மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. இம் முறை இத் தினத்தை பெண்கள் சட்டிப் பானைகளை கையில் ஏந்தியவாறே கொண்டாட வேண்டிய நிலை. அத்தியவசிய பொருட்களின் விலை நாளுக்குநாள் கூடி வருகிறது. அரசு மக்களை ஏமாற்றிவருகிறது. மக்களை ஏமாற்றிய அரசை வீட்டுக்கு அனுப்பும் நாள் வெகுதொலைவில் இல்லை. கூட்டு எதிரணியிலுள்ள 51 பேரை சிறையில் அடைத்தாலும் எமது பயணத்தை எவராலும் தடுக்கமுடியாது.



வாழ்கைச் செலவு கூடியுள்ளது. மக்கள் பட்டினிச்சாவை எதிர் கொண்டுள்ளனர். வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. நல்லாட்சி அரசு பொய் கூறி தொடர்ந்தும் மக்களை ஏமாற்றி வருகிறது. இந்தசித்திரைப் புத்தாண்டுடன் இந்த நல்லாட்சிஅரசு கவிழும். மஹிந்த தலைமையில் மக்களாட்சி மீண்டும் மலரும் என்றார்.

# நான்கு உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள் பதவியேற்பு

(கிண்ணியா சஹ்ரின் எம். இஸ்மத்)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள நான்கு உள்ளூராட்சி மன்றங்களின் புதிய செயலாளர்கள் நேற்று புதன்கிழமை (01) கடமைப்பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இதன் அடிப்படையில் கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றிய எஸ்.அஸ்வத்கான் கிண்ணியா பிரதேச சபையின் செயலாளராகவும், கிண்ணியா பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய எம்.ஜே. எம். அன்வர் கிண்ணியா நகர சபையின் செயலாளராகவும், கிண்ணியா நகர சபையில் செயலாளராக கடமையாற்றிய யாழினி நரேந்திரநார் தம்பலகாம பிரதேச சபையின் செயலாளராகவும் தம்பலகாம பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய விஷ்ணு வெற்றிடமாகக் காணப்பட்ட திருகோணமலை நகர சபை செயலாளராகவும் கடமைப்பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இவர்களுக்கான இடமாற்றத்திற்கான கடிதத்தினை கிழக்கு மாகாண பிரதம செயலகத்தின் நிருவாகத்திற்கு பொறுப்பான பிரதிப் பிரதம செயலாளர் ஏ.எச்.எம். அன்சார் வழங்கி வைத்தார்.

# 130 பேருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு

(ஏறாவூர் நிருபர் )

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மக்களுக்கான வாழ்வாதார சமூகநல உதவிகள் மற்றும் புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தலைமையில் நடைபெறவுள்ளது.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரத்தில் கற்கும் 40 மாணவர்களுக்கான சிப்தொர புலமைப் பரிசில், க.பொ.த. சாதாரண தர மாணவர்கள் 40 பேருக்கு சிசுதிரிய புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் புலமைப் பரிசில்கள் உள்ளடங்கலாக மொத்தம் 80 மாணவர்கள் இந்நிகழ்வின் போது புலமைப் பரிசில் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

# "பெண்களின் குரலினை ஓங்கி ஒலிக்கச்செய்வோம்" தொனிப்பொருளில் பாதயாத்திரை





(பழுலுல்லாஹ் பர்ஹான்- சமீம் மொஹமட்)

2017 மார்ச் மாதம் அனுஷ்டிக்கப்படும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் பணிப்புரைக்கமைய மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் பெண்களின் குரலினை ஓங்கி ஒலிக்கச் செய்வோம் எனும் தொனிப்பொருளில் பெண்கள் பாதயாத்திரை நேற்று புதன்கிழமை மட்டக்களப்பு மகாத்மா காந்திப் பூங்காவில் இருந்து மட்டக்களப்பு டேர்பா மண்டபம் வரை சென்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும்,மாவட்டச் செயலாளருமான பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் இடம்பெற்ற மேற்படி யாத்திரையில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.கிரிதரன், மண்முனை வடக்கு உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.யோகராஜா,மாவட்ட பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவுகளின் உத்தியோகத்தர்கள், பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதேச செயலகங்களின் பெண்கள் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். யாத்திரையில் கலந்து கொண்டோர் தேயிலை பறிக்கும் எங்கள் அன்புக்குரியவர்களே உங்களுக்கு நாங்கள் கடனாளிகள், உள்ளூராட்சி அமைப்புக்களில் பெண்களுக்கான 25 வீத பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்துவோம், நீங்கள் வெளிநாடுகளில் சிந்தும் வியர்வைதான் எங்கள் அந்நிய செலாவணி எனும் தலைப்புக்களிலான பதாதைகளை ஏந்தியிருந்தனர். பாத யாத்திரையைத் தொடர்ந்து மண்முனை வடக்கு பிரதேச செயலக டேர்பா மண்டபத்தில் தேசிய மகளிர் தின கருத்தரங்கொன்று இடம்பெற்றது.

# லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் இருதய சிகிச்சை பிரிவை ஆரம்பிக்குக

## ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை

கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் இருதய நோய் பிரிவுடன் இணைந்த முழு வசதிகளைக் கொண்ட அவசர சிகிச்சைப் பிரிவு நிர்மாணப் பணிகளை விசேட திட்டமாக விரைவாக ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்த திட்டத்தின் செயற்பாடுகளை விரைவாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

கொழும்பு, லேடி ரிட்ஜ்வே (சிமாட்டி சிறுவர் வைத்தியசாலை) சிறுவர் மருத்துவமனையில் நிர்மாணிக்கப்படவுள்ள இருதய நோய் பிரிவுடன் இணைந்த முழு வசதிகளைக் கொண்ட அவசர சிகிச்சைப் பிரிவு பத்து மாடிகளைக் கொண்டதாகும்.

அவற்றில் 4 மாடிகள் இருதய நோய் தொடர்பிலும், 3 மாடிகள் அவசர சிகிச்சைப் பிரிவுக்கும், 2 மாடிகள் பிறக்கும் பிள்ளைகளுக்கான அவசர சிகிச்சைப் பிரிவுக்கும், மேல் மாடி பணிக்குழுவினரின் பயிற்சிக் கருத்தரங்குகளுக்காகவும் ஒதுக்கப்படவுள்ளன.

இலங்கையில் ஆண்டுதோறும் 370,000 அளவிலான பிறப்புக்கள் நிகழ்கின்றன. சிசு மரணங்கள் 3,000 ஆகும். ஐந்து வயதுக்கு குறைந்த பிள்ளைகளின் இறப்பு வீதம் 1,000 க்கு 10 ஆக வருடாந்தம் 3,700 நிகழ்கிறது. பிறப்பிலான இருதயநோய், நிமோனியா, குருதி கடுமையாக விஷமடைதல் மற்றும் உடலுறுப்புக்கள் செயலிழத்தல் போன்றவையே இந்த மரணங்களுக்கு காரணங்களாக கூறலாம்.

அத்துடன் கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் வெளிவாரி நோயாளர் பிரிவுக்கு 3,000 க்கு மேற்பட்ட நோயாளிகள் நாளாந்தம் வருவதுடன், அவர்களில் 900 வரையானோர் மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்றனர்.

வாழ்க்கைக்கும் மரணத்துக்கு மிடையில் போராடும் ஆயிரக்கணக்கான பிள்ளைகளின் உயிரைக் காப்பாற்றும் வசதிகளுடனான கட்டிட தொகுதி நிர்மாணிக்கப்படவுள்ளது.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.அபேகோன், இலங்கை சிறுவர் மருத்துவ நிபுணர் சங்கத்தின் தலைவர் மருத்துவ கலாநிதி லக்குமார் பெர்ணான்டோ மற்றும் சங்கத்தின் பிரதிநிதிகளும் கலந்துரையாடலில் பங்குபற்றினார்கள்.



சர்வதேச மகளிர் தினம் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறுவதை முன்னிட்டு பெண்களின் குரலை ஓங்கி ஒலிக்கச்செய்வோம் எனும் தொனிப்பொருளில் பிரச்சார பாதயாத்திரை நேற்று காலை கொழும்பு தாமரை தடாகத்திற்கு அருகில் நடைபெற்றது. மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சும், சிவில் அமைப்புக்களும் இதனை ஏற்பாடு செய்திருந்தன. இதன்போது பிரதமரின் பாரியார் மைத்திரி விக்ரமசிங்க பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டதோடு, அமைச்சர்களான சந்ராணி பண்டார, தலதா அத்துகோரள மற்றும் பெருமளவிலான பெண்களும் கலந்துகொண்டனர்.

# மேல் மாகாண போக்குவரத்து தலைவராக துஸித குலரத்ன

(எம்.எஸ்.எம். முன்தஸிர்)

மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் புதிய தலைவராக புளத்சிங்கள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் துஸித குலரத்ன நியமனம் பெற்றுள்ளார்.



பத்தரமுல்லவில் அமைந்துள்ள அதிகார சபையின் தலைமையகத்தில் இவர் கடமைப் பொறுப்புக்களை ஏற்றுகொண்டார். திறன் அபிவிருத்தி தொழிற்பயிற்சி அமைச்சர் மஹிந்த சமரசிங்க, முதலமைச்சர் இசுர தேவப்பிரிய, மாகாண அமைச்சர் காமினி திலகசிறி உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் பலரும் பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கடந்த 1997 புளத்சிங்கள பிரதேச சபையுடன் தொடர்புப்பட்ட இவர் புளத்சிங்கள மற்றும் மதுராவல பிரதேச இணைப்புக்குழுக்களின் இணைத்தலைவராகவும் தற்போது கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சட்டக்கல்லூரிக்கு விண்ணப்பம் கோரல்

இலங்கை சட்டக்கல்லூரிக்கு 2017 ஆம் ஆண்டுக்கான புது மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்திபெற்ற 17 வயதுக்கு மேற்பட்டோர் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிப்போர், சாதாரண தரப்பரீட்சை ஆங்கில மொழியிலும் மற்றும் சிங்களம், தமிழ் மொழிகளிலும் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பங்களை இம்மாதம் முதலாம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை சட்டக் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என சட்டக்கல்லூரி அதிபர் பி.இந்திரா எஸ்.சமரசிங்க தெரிவித்தார்.

விண்ணப்பிக்கும் இறுதித் திகதி மார்ச் 31 ஆம் திகதியாகும். செப்டம்பர் மாதத்தில் நடைபெறும் போட்டிப்பரீட்சையில் அபேட்சகர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

# சர்வதேச மகளிர் தின தேசிய வைபவம் மாத்தறையில்



சர்வதேச மகளிர் தின தேசிய வைபவம் இம்மாதம் 8 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோர் தலைமையில் மாத்தறை சனத் ஜயசூரிய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தெரிவித்தது.

இவ்வைபவத்தில் 1500 பெண்கள் உட்பட பல அதிதிகள் பங்கேற்க உள்ளனர்.

மகளிர் தினத்திற்கு இணைவாக மாத்தறை மாவட்டம் முழுவதும் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு மாத்தறை பொலிஸ் நிலையத்தை மையமாகக் கொண்டு அமைக்கப்படும். இந்தப் பிரிவுக்குரிய கட்டடத்திற்கான அடிக்கல்லும் அன்றைய தினம் நாட்டி வைக்கப்படவுள்ளது.

நேற்று முதல் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் மகளிர் தினத்தை முன்னிட்டு பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பெண்களின் குரலை ஓங்கச் செய்யும் வகையில் 24 மாவட்டங்களிலும் பேரணிகளையும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு தெரிவித்தது.

# தெல் பாலாவின் உடலும் இலங்கையில்

இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையில் இடம்பெற்றதாக கூறப்படும் சட்டவிரோத போதைப் பொருள் வியாபாரத்துடன் தொடர்புடைய முக்கிய குற்றவாளியான தெல் பாலா எனப்படும் கறுப்பையா வாப்பு பாலன் உயிரிழந்தார்.

தமிழ்நாடு சென்னையிலிருந்த நிலையில் உயிரிழந்த அவரின் சடலம் நேற்றுமுன்தினம் இரவு இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது. இதற்கமைய நேற்றையதினம் உறவினர்கள் சடலத்தை பெற்றுக் கொண்டனர்.

கடந்த 2001 ஆம் ஆண்டு 35 கிலோகிராம் ஹெரோயினை நாட்டுக்கு கொண்டு வந்ததாக இவர் மீது குற்றம்சாட்டப்பட்டது. இதனையடுத்து தேடப்பட்டு வந்த அவர் தலைமறைவாகியிருந்தார்.

இந்தநிலையில் திடீர் சுகயீனமுற்ற அவர் உடல் உறுப்பு மாற்று சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட நிலையில் இச்சிகிச்சை பலனிக்காதமையாலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

# தர்காநகர் கடலில் குளித்த மாணவர்களில் ஒருவர் மாயம்



தர்கா நகரிலிருந்து பெந்தோட்டைக் கடலுக்கு குளிக்கச் சென்ற மூன்று மாணவர்கள் அலையினால் அடித்துச் செல்லப்பட்டபோது ஒருவர் காணாமல் போயுள்ளார்.

மற்ற இருவர் அருகிலிருந்தவர்களால் மீட்கப்பட்டுள்ளனர். மீட்கப்பட்ட இருவரில் ஒருவர் பலபிடிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முஹம்மத் இப்ஹான் எனும் மற்ற மாணவரைத் தேடும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். தர்கா நகரிலுள்ள சர்வதேசப் பாடசால ஒன்றில் எட்டாம் தரத்தில் படிக்கும் மூன்று மாணவர்களே இவ்வாறு பெந்தோட்டைக்கு குளிக்கச் சென்றுள்ளனர்.

இக்கல்லூரியில் இவர்களது தரத்தில் கற்கும் ஏனைய மாணவர்கள், பாடசாலை சுற்றுலாவில் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட தடை

பாடசாலை மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுத்தப்படுவதை தடை செய்யும் வகையில் கல்வி அமைச்சு சுற்றுநிருபமொன்றை வெளியிட்டுள்ளது.

இதற்கமைவாக வெளிநபர்களும் குழுக்களும் அனுமதியின்றி பாடசாலைகளுக்குள் பிரவேசிப்பதும் மாணவர்கள் மத்தியில் உரையாற்றுவதும் முழுமையாகத் தடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும் நடைமுறைப் படுத்துவதற்கு எதிராக மாணவர்கள் மத்தியில் அடிப்படைவாத கருத்துக்களை முன்னெடுப்பதற்கு சில குழுக்களும் நபர்களும் முயற்சிப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

இந்த நடவடிக்கை மாணவர்களின் கல்விக்கும், ஒழுக்கத்தைப் பேணுவதற்கும் தடையாக அமைந்திருப்பதாக பெற்றோர் கல்வி அமைச்சிற்கு முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த முறைப்பாடுகளையும் ஏனைய பல விடயங்களையும் கருத்திற் கொண்டு கல்வி அமைச்சின் செயலாளர் இந்த விசேட சுற்றுநிருபத்தை வெளியிட்டுள்ளார்.

# ஞானசார தேரருக்கு எதிராக குற்றப்பத்திரிகை வாசிப்பு

நீதிமன்றத்தை அவமதித்தது தொடர்பாக பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகோட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக நேற்றையதினம் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டது.

கடந்த 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதியன்று, ஊடகவியலாளர் பிரகித் எக்னலிகொட காணாமல் போனது தொடர்பான வழக்கு ஹோமாகம நீதிமன்றத்தில் அழைக்கப்பட்ட போது நீதிமன்றம் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதன் மூலம், கலகொட அத்தே ஞானசார தேரர் நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாக குற்றம் சாட்டி ஹோமாகம மாஜிஸ்ட்ரேட் நீதிபதி ரங்க திசநாயக்க புகாரொன்றை சமர்ப்பித்தார்.

இதன்படி சட்டமா அதிபரினால் ஞானசார தேரருக்கு எதிராக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

குற்றப்பத்திரிக்கை வாசிக்கப்பட்ட பின்னர் தான் நிரபராதி என்று ஞானசார தேரர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அதன் பின்னர் விசாரணை எதிர்வரும் மே மாதம் 16 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கு விசாரணை முடிவடைந்த பின்னர் ஊடகங்களிடம் பேசிய ஞானசார தேரர் இராணுவ புலனாய்வு அதிகாரிகள் காரணமின்றி விளக்கமறியலில் வைக்கப்பட்டதை எதிர்த்து தான் அன்று நீதிமன்றம் முன் போராட்டத்தில் ஈடுபட்டதாக தெரிவித்தார். ஆனால் நீதிமன்றத்தை அவமதிக்கும் நோக்கத்துடன், தான் அதனை மேற்கொள்ளவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பெண்ணை கொலை செய்த நபருக்கு மரணதண்டனை

கோடரியால் பெண்ணொருவரை தாக்கி கொலை செய்த சம்பவத்தில் சந்தேகநபர் ஒருவருக்கு மரணத்தண்டனை விதித்து அநுராதபுரம் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

குறித்த உத்தரவினை வடமத்திய மாகாண மேல் நீதிமன்ற நீதவான் மஞ்சுள திலக்கரத்ன தெரிவித்தார்.

பதவிய பராக்கிரம பிரதேசத்தில் வசிக்கும் நபரொருவருக்கே குறித்த மரணத்தண்டனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி அநுராதபுரம் வெலிஓயா ஹங்சவில வெல்லவாய பிரதேசத்திலேயே குறித்த கொலை சம்பவம் இடம்பெற்றமையும் பதிவாகியுள்ளது.



NAVAMANI DAILY
நவமணி
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
02ND MARCH 2017 - THURSDAY

# கேப்பாப்புலவு மக்களிடம் முஸ்லிம் சமூகம் படிப்பினை பெறட்டும்

கேப்பாப்புலவு மக்களின் போராட்டம் வெற்றி பெற்றுள்ளது. ஆம், சுமார் ஒரு மாதகாலமாக, தமது காணிகளை தம்மிடம் மீளவும் கையளிக்குமாறு, கேப்பாப்புலவு மக்கள் மேற்கொண்ட போராட்டத்தின் விளைவாக, நேற்று அக்காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

கேப்பாப்புலவு பிலவுக்குடியிருப்பு மக்கள் நேற்று தமது காணிகளுக்குச் சென்று அவற்றை பார்வையிட்டனர். தம் பூவீகக் காணிகள் தம்மிடம் கிடைத்தமையிட்டு, அவர்கள் சந்தோசமடைந்துள்ளனர். இது பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டம், அவர்களுக்கு கொண்டுவந்துள்ள வெற்றியே ஆகும்.

இந்தப் போராட்டம் கேப்பாப்புலவு மக்களுக்கு வெற்றியைக் கொணர்ந்திருப்பது போலவே, நாட்டின் ஏனைய மக்களுக்கு ஒரு பாடத்தையும் கற்பித்துள்ளது. குறிப்பாக, இப்போது நாட்டில் பெருவாரியாக அடக்குமுறைக்கும், அச்சுறுத்தல்களுக்கும் உட்படுகின்ற முஸ்லிம் சமூகத்துக்கு ஒரு பாடத்தைக் கற்பித்துள்ளது.

அதாவது, முஸ்லிம் சமூகம் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றபோது, முஸ்லிம் அரசியல்வாதிகள் எமக்காகப் பேசுவார்கள் என்று, பிரச்சினையை அரசியல்வாதிகளின் தலையில் போட்டுவிட்டு, அடங்கிக் கிடப்பதே முஸ்லிம் சமூகத்தின் சங்கதியாக உள்ளது.

ஆனால், கேப்பாப்புலவு மக்கள் அரசியல்வாதிகளில் தங்கி நிற்காது, தமது காணிகளை மீளப் பெறுவதற்காக, ஒரு மாத காலத்துக்கும் மேலாக, வீதியில் இறங்கி, சாத்வீகமான முறையில் போராட்டம் மேற்கொண்டு, வெற்றிபெற்றுள்ளனர். இந்த ஜனநாயக நாட்டில், முஸ்லிம் சமூகமும் இவ்வாறான வழிமுறைகளைப் பின்பற்ற முன்வர வேண்டும்.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக, அரசியல் ரீதியாகவும், ஆயுத ரீதியாகவும் துன்புறுத்தப்பட்ட தமிழ் சமூகம், இப்போது, இவ்வாறான சாத்வீகமான வழிமுறைகளைப் பயன்படுத்தி, தம் உரிமைகளை மீட்டெடுப்பதில் முஸ்லிம் சமூகத்துக்கு படிப்பினையாக உள்ளது.

தமிழ் சமூகத்தைப் பிரதிநித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளில் தங்கி நிற்காது தமிழ் சமூகம் செயற்பட முன்வந்தமை பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். மக்கள் பிரச்சினைகளைப் பேசுவதற்காக பாராளுமன்றம் அனுப்பப்படுகின்ற அரசியல்வாதிகள் செய்ய முடியாத விடயங்களை, நாமே செய்வோம் என்ற கேப்பாபுலவு மக்களின் தைரியம் பாராட்டப்பட வேண்டும்.

இலங்கை முஸ்லிம் சமூகமும், இனியும் அரசியல்வாதிகளிடம் தம் பிரச்சினைகைள ஒப்படைத்துவிட்டு, அடங்கிக் கிடக்காது, சாத்வீகமான வழிமுறைகளில் போராட்டங்களை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான், இருக்கின்ற பிரச்சினைகளுக்கு ஓரளவாவது தீர்வுகள் கிடைக்கும்.

இலங்கை முஸ்லிம் சமூகத்தின் அரசியல் விழிப்புணர்வு மிகவும் தாழ்ந்த நிலையில் இருப்பதால், அரசியல்வாதிகளை நூறு சதவீதம் நம்பும் நிலையே, இன்னும் உள்ளது. இந்த நிலையில் மாற்றம் வர வேண்டும். சிவில் சமூக இயக்கங்கள், முஸ்லிம் சமூகத்தின் அரசியல் விழிப்புணர்வை உயர்த்த முயற்சிக்க வேண்டும்.

அப்போதுதான், கேப்பாப்புலவு மக்கள் போல் சுயமாக சிந்தித்து, தமது பிரச்சினைகளுக்காக தீர்வை தாமே பெற்றுக்கொள்வதற்கான போராட்டங்களில் இறங்கியது போன்று, முஸ்லிம் சமூகமும் செயற்படும் நிலை, உடனடியாக இல்லாதபோதும், சில காலத்தின் பின்னரேனும் உருவாகும்.

நீதிக்காகவும், தம் உரிமைக்காகவும் போராடி, வெற்றி பெற்ற கேப்பாப்புலவு மக்களுக்கு எம் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். அதேநேரம், கேப்பாப்புலவு மக்களிடமிருந்து முஸ்லிம் சமூகம் படிப்பினை பெற வேண்டும் என்பதும் எம் அவா.

# இடதுசாரிகள் சரியான பாதையில் பயணிக்கிறார்களா?

ஜயதிலக டி சில்வா

எமது நாடு அரசியல் சுதந்திரத்தைப் பெற்று 70 ஆண்டுகளை அடைந்துள்ளது. அன்றும் இன்றும் நாம் தீர்வு காண முடியாத சமூக பொருளாதார பிரச்சினைகள் பல உள்ளன. அவற்றில் சில மும்முரமான பிரச்சினைகளாக உள்ளன. அது என்ன சொல்வதென்றால், முன்னேற்றத்தை அளவிட வேண்டியது சமூகத்தில் இன்று இருக்கும் நிலைமையை சமாந்தரமாக அல்லது ஒப்பீட்டளவில் பார்க்கும்போது தான்.

உதாரணமாக நாங்கள் ஒப்பிட்டு பார்க்க வேண்டியது அன்றிருக்கும் வருமானமும் இன்றிருக்கும் வருமானமுமன்றி, அன்றிருந்த உள்ளவர் இல்லாதோர்களது இடைவெளி இன்றாகும்போது எவ்வாறு வேறுபட்டிருக்கிறது என்பதாகும். உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களின்படி அது இன்று விசாலமடைந்துள்ளது. வேறு சொற்களில் கூறுவதாக இருந்தால் அந்த மாற்றத்தை இல்லாமல் செய்வதற்குப் பதிலாக, அதனை குறைப்பதற்குக் கூட எங்களால் முடியாமல் உள்ளது.

மற்றக் காரணிகள் பக்கம் திரும்பினால், எங்களுக்கு தென்படுவது சுதந்திரத்தை வென்ற காலத்தோடு ஒப்பிடும்போது இந்த நாட்டு மண் அடைந்திருக்கும் மக்களுக்கிடையிலான நட்பு, ஒற்றுமை மற்றும் சமாதானம் என்பன முன்னேற்றம் காணாதது மட்டுமன்றி மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாகும். அதனால் நாம் மூன்று தசாப்த குரூரமான சகோதர கொலை யுத்தமொன்றை எதிர்கொண்டோம். அதன் பிரதிபலன்களால் இன்றும் நாங்கள் கஷ்டப்படுகின்றோம். யுத்தம் முடிவுற்று ஏழு வருடங்கள் கழிந்தும் சமாதானம் மற்றும் நல்லிணக்கம் இன்றும் கனவாகவே இருக்கின்றது.

தேசிய பொருளாதாரம் நெருக்கடியிலேயே தொடர்கின்றது. கடன் சிக்கலில் நாங்கள் சிக்கித் தவிக்கின்றோம். எதிர்கால பரம்பரையினரையும் கூட நாங்கள் அடகு வைத்தே இன்றைய நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

சுதந்திரத்திற்குப் பிறகு இலங்கையை இரு பிரதான கட்சிகளே ஆண்டன. அது ஸ்ரீ.ல.சு.கட்சியும், ஐ.தே.கட்சியுமாகும். ஏனைய சிறு கட்சிகள் மற்றும் குழுக்களோடு இடைக்கிடையே கூட்டாக செயற்பட்டாலும் முக்கியமான தீர்மானங்களை இரண்டு பிரதான கட்சிகளே எடுத்தன. அவர்கள் மாறி மாறி நாட்டை ஆண்டார்கள். இந்த இரு தரப்பினரும் மக்களது அபிலாஷைகளை நிறைவேற்ற தவறினார்கள் என்பது தெளிவாக உள்ளது. அதனை அவர்களே ஏற்றுக்கொள்கின்றார்கள். ஏழு தசாப்த அபிவிருத்தியின் பின் இன்று ஏழைகள் மேலும் ஏழைகளாக இருப்பதோடு தனவந்தர்கள் மேலும் தனவந்தர்களாக மாறியுள்ளார்கள்.

நிலைமை எந்தளவு மோசமானதென்றால் மக்களது ஜனநாயக உரிமைகள், மனித உரிமைகள் முழுமையாக அழிக்கப்பட்டு அரசியல் அமைப்பு ரீதியான சர்வாதிகாரம் உறுதிப்படுத்தப்பட்ட பின் நாட்டை உறுதிப்படுத்த முடிந்ததும் அதன் மூலம் நெருங்கிய நண்பர்களாகிய தனவந்தர்களுக்கு மாத்திரம் சுவர்க்கபுரியாக இருந்து நரகத்திற்குள் விழுந்த மக்களை 2015 ஆம் ஆண்டு ஜனவரியில் நடந்த மக்கள் தலையீட்டின் மூலம் மீட்க முடிந்தது.

அன்று வேறு வேறாக இருந்த ஆட்சி அதிகாரத்தை இன்று ஐ.தே.கவும் ஸ்ரீ.ல.சு.கவும் கூட்டாக மேற்கொள்கின்றது. புதிய நிலைமையும் அதுவே. இந்தக் கூற்று இதுவரை தோல்விகண்டுள்ள முறைக்கு மாற்றீடாக அமையுமா? என்பதை பிரதானமாக மக்களுக்குச் சாதகமான சுதந்திரமான பொருளாதார வழியில் அது செல்லுமா? என்பதிலிருந்தே தீர்மானிக்க வேண்டும். எனினும் கடந்த இரு வருட அனுபவம் தொடர்பாக அவ்வாறான சுதந்திர மாற்று வழியொன்றை தற்போதைய ஆட்சியாளர்கள் மேற்கொள்வார்கள் என நம்ப முடியாதிருப்பதாக மக்கள் கூறுகின்றனர்.

அரச தலைவர்களது ஆடம்பரமான சொற்களது பயன்பாடு, சுப வாழ்த்துக்களை எவ்வளவு கேட்க முடிந்த போதிலும் தேர்தலின் போது மக்களுக்களித்த முக்கியமான வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசாங்கம் பின்னிற்பதோடு மட்டுமன்றி இப்போது அதற்கெதிராக பகிரங்கமாக செயற்படுவதையும் காண முடிகின்றது.

சில உதாரணங்களை சுட்டிக்காட்டுவோம்.

தேர்தலின் போது கூறியவற்றிற்கு எதிராக இப்போது கூறுவது, அரசியல் யாப்புக்காக புதியதொரு யாப்பை வகுப்பதில்லை என்பதாகும். சில மாற்றங்களை மட்டும் செய்வதாக கூறுகிறார்கள். மக்களுக்களித்த வாக்குறுதிக்கு மாற்றமாக செயலதிகாரம் மிகு ஜனாதிபதி முறையை தொடருவதாக கூறுகிறார்கள். 13ஆவது அரசியல் யாப்புக்கு அப்பால் சென்று செயற்படுவதாக கூறியவர்கள் இப்போது




அதன் அதிகாரங்களையும் குறைப்பதாக கூறுகிறார்கள். எனினும் தற்போது உள்ள யாப்பின் சில சரத்துக்களை திருத்தாமல் அவ்வாறே தொடருவதாக கூறுகிறார்கள். அது தொடர்பாக கலந்துரையாடுவதைக்கூட அவர்கள் அட்டகாசமாக நிராகரிக்கிறார்கள். அப்போது சில இனங்களது கருத்துக்களை நேரடியாக நிராகரிக்கிறார்கள்.

ஊழல் மோசடிகளை இல்லாதொழிப்பதாக கூறுவதாயின், மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பாகவும் கடந்த அரசில் பொறுப்பானவர்களுக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுகளுக்கு எதிரான விசாரணைகளும் ஆமை வேகத்தில் செல்வது குறித்து மக்கள் மத்தியிலே ஒரு சாதாரண சந்தேகத்தை உருவாக்கியுள்ளது. அந்த குற்றங்களை மறைத்து குற்றவாளிகள் தப்பித்துக் கொள்வதற்கான கணக்கு வழக்குகளின் உடன்படிக்கை தொடர்பான தற்போதைய ஆட்சியின் தலைவர்கள் இருக்கிறார்கள் என்ற சந்தேகம் பொது மக்கள் மத்தியிலே உருவாகியுள்ளது. இந்த சந்தேகத்தை மேலும் பலப்படுத்தும் வகையில் விசாரணைகளின் போது பெரிய மீன்களை விட்டு நெத்தலி மற்றும் கூனிகளை பிடிப்பது போன்று அமைந்துள்ளது.

இந்த நிலைமையின் கீழ் அநேகருடைய வாயில் முணுமுணுக்கும் கேள்வி, அவர்களும் கள்வர்கள் இவர்களும் கள்வர்கள் என்ன செய்வதென்பதாகும்.

தெளிவாக மாற்று வழியொன்றை தேடிக்கொள்ள வேண்டும். தற்போதைய ஆட்சியாளர்கள் பழைய ஆட்சியாளர்களினால் கட்டப்பட்டுள்ள தொப்புள் கொடிகளை அவிழ்த்து விடாத மட்டுமன்றி, அவ்வாறு செய்வதற்கும் இயலாதவர்களாக இருப்பதாக தென்படுகின்றது. கடந்த ஆட்சியாளர்களினால் பயன்படுத்தப்பட்ட மற்றும் சம்பிரதாயங்கள் தற்போதைய ஆட்சியாளர்களினாலும் எவ்வித விமர்சனங்களும் இல்லாமல் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

எந்தவித பொருளாதார அல்லது அரசியல் அல்லது ஏனைய கொள்கைகள் சகல நாடுகளுக்கும் சகல இடங்களுக்கும் எப்போதும் ஒன்றாக அமைய முடியாது. அந்தந்த நாடுகளின் அவ்வவ் காலங்களில் நிலவும் உண்மையான நிலையை கருத்திற் கொண்டு அவை உருவாக்கப்பட வேண்டும். எங்களுக்கு அபிவிருத்திக்காக வெளிநாட்டு முதலீடு தேவையாகும். எனினும் அவற்றை பெற்றுக் கொள்ளும்போது உள்நாட்டு கைத்தொழில் மற்றும் பொது மக்களது நலனில் கவனம் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு இல்லாத போது மோசடிக்காக கள்வர்களது மனதை மட்டும் நிறைவுபடுத்துமாக இருந்தால் அது பாதிப்பாக அமையும். வேறு சொற்களில் கூறுவதாக இருந்தால், பெகர்களில் இருந்து நாம் கவனமாக இருக்க வேண்டும்.

அத்தோடு, தனியார் அரச முயற்சிகளது பங்களிப்பு கொள்கைகளை கைவிட முடியாதபோதும் அதிலும் எமது நாட்டு மக்களின் அபிலாஷைகள் மற்றும் தேவைக்கு சாதகமாக பிரேரணைகளை தெரிவு செய்வது முக்கியமாகும். அவ்வாறான பிரேரணைகள் குறித்து தீர்மானங்கள் எடுக்க வேண்டியது ஒவ்வொன்றாக பரிசீலித்து அளந்து சாதக பாதகங்களை ஆராய்ந்தே. உதாரணமாக அரச முயற்சிகளிலிருந்து ஒதுங்க வேண்டுமென்பது ஒரு கருத்தாகும். எனினும் ஆசிய நாடுகளில் அநேகமானவை சீனா, தென்கொரியா போன்ற நாடுகள் அபிவிருத்தி காண அரச துறையில் பலமான முயற்சிகளை முன்னெடுத்தது என்பது இரகசியமல்ல. எம்மைப் போன்று வளர்முக நாடுகளின் தனியார் துறை அரசாங்கத்தினது ஒழுங்குபடுத்தலால் மட்டும் போதுமானதல்ல. சில தொழில்நுட்ப சேவை துறைகளில் அரச முயற்சி கட்டாயம் தேவைப்படுகின்றது. சர்வதேச நிதியம், உலக வங்கி, சர்வதேச வர்த்தக ஸ்தாபனம் போன்ற பூகோள முதலாளித்துவ நிருவாகிகளின் மும்மூர்த்திகளது பட்டியலின் படி சென்று, மேற்கின் அபிவிருத்தி வழியை பின்பற்றுவது அபாயகரமானதாக அமையலாம்.

தற்போதைய அரசின் இயலாமை அதன் தலைவர்களது தனிப்பட்ட பலவீனங்களின் பிரதிபலனாகவல்ல. அவை ஓரளவு தாக்கத்தைச் செலுத்தினாலும் அது முக்கியமாக அமைவதில்லை. தவறு அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூக சக்திகளது அபிலாஷைகள் மக்களது அபிலாஷைகளுக்கு எதிராக செல்வதாகும். தேர்தல் ஒன்றில் முழு மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாக கூறினாலும் கொக்கின் வெள்ளை தென்படுவது பறக்கும்போது என்பது போன்று அவர்களது குறைபாடுகள் தென்படுவது அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட பின்னரே.

நாட்டை சுதந்திரமான பொருளாதார வழிக்கு இட்டுச்செல்ல வேண்டுமென்றால் துயரப்படும் மக்களுக்கு நெருங்கிய சமூக சக்தியினை தயார்படுத்தும் தலைமைத்துவமே தேவைப்படுகின்றது. துரதிஷ்ட வசமாக அவ்வாறான சமூக சக்தியொன்று இன்னும் களத்திற்கு வரவில்லை. அது இன்னும் வரலாற்று தேவையாகவே இருக்கின்றது. அடைய வேண்டிய இலக்கு நோக்கம் மட்டுமே. உலகின் ஏனைய நாடுகளின் அனுபவங்கள் காட்டுவது அவ்வாறான சக்திகளை பிரதானமாக கொண்ட இடதுசாரி இயற்கை அமைய வேண்டும் என்பதாகும். எனினும் எமது இடதுசாரிகள் அதன் பழைய சக்தியின் நிழலுக்கு சமமானதாகும். பலவீனமானது. பல்வேறு காரணிகளால் பிரிந்து துண்டு துண்டாக இருக்கின்றன. நம்பிக்கைக்குரிய சக்தியாக தோன்றுவதற்கு அவற்றுக்கு முடியாமல் இருப்பது சுதந்திரமான மக்களை ஒன்று சேர்த்து நெறிப்படுத்துவதற்கு பதிலாக அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு குறுகிய வழிகளில் செல்லும் சந்தர்ப்பவாத செயற்பாடுகளாகும். இது பழைய இடதுசாரிகளுக்கும் புதிய இடதுசாரிகளுக்கும் பொருந்தும்.

தேசிய பிரச்சினையை நோக்கிய கருத்து முரண்பாட்டில் இடதுசாரிப் பிரிவு பலமாக உள்ளது. சில இடதுசாரிகள் இனவாதிகளை செல்லப்பிள்ளையாக வைத்திருக்கிறார்கள். அது நகர, பெருந்தோட்ட கிராமப்புறங்களில் வேலை செய்யும் மக்களது ஒற்றுமைக்கு பாதகமாக உள்ளது. கட்சி அரசியல் போன்று தொழிற்சங்கங்களும் துண்டு துண்டாக பிரிந்து இருக்கின்றன. ஐக்கிய இடதுசாரியை நோக்கி முன்னேறுவதாயின் அதற்குச் செல்ல வேண்டியது வெகு தூரமாகும். அதே போன்று, இடதுசாரிகளை அடையாளப்படுத்திக் கொள்வதும் முக்கியம். இன்று இடதும் வலதும் மாறியுள்ளது. மக்களது ஜனநாயக உரிமைகள் மற்றும் வாழ்க்கைப் போராட்டங்களை கைவிட்டு இடதுசாரிகளை ஒற்றுமைப்படுத்த முடியாது. கருத்து முரண்பாடுகளை ஒதுக்கி திமிர்பிடித்த தாழ்வு மனப்பான்மையை புறந்தள்ளி விட்டு ஒற்றுமையாக ஒன்றுபட்டால் எதிர்காலத்தில் இடதுசாரிகளது ஒற்றுமையை எதிர்பார்க்கலாம். அவ்வாறான ஒரு பிரயோக ரீதியிலான வேலைத் திட்டத்தை வழங்க முடியுமாவது மக்கள் போராட்ட அனுபவத்திலாகும்.

எனவே, மற்றவர்களுக்காக கடைக்குச் செல்வதைத் தவிர்த்து, மக்களுக்காக மட்டும் தோன்றுவதாக முடிவு செய்தால் நாட்டுக்கும் தமக்கும் பிரயோசனமாக அமையும் என்பதை புரிந்து கொள்வதற்கான காலம் இடதுசாரிகளுக்கு உருவாகியுள்ளது.

# கிழக்கு வேலையில்லா பட்டதாரிகளுக்கு ஓரிரு தினங்களுக்குள் சாதகமான முடிவு

## பிரதியமைச்சர் அமீர்அலி நேரில் சென்று அறிவிப்பு

(எம்.எஸ்.எம்.நூர்தீன்)

கிழக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகளுக்கான அரச நியமனம் வழங்குவது குறித்து அரசாங்கம் சாதகமான முடிவினை இன்னும் ஓரிரு தினங்களுக்குள் அறிவிக்கும் என எதிர்பார்ப்பதாக பிரதியமைச்சர் எம்.எஸ். எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

மட்டக்களப்பில் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் வேலையில்லா பட்டதாரிகளை நேற்று சந்தித்த போது அவர்களிடம் மேற்கண்டவாறு பிரதியமைச்சர் அமீர் அலி கூறினார்.

வேலையில்லா பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வழங்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வழங்கிய கோரிக்கை கடிதத்தினையும் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வேலையில்லா பட்டதாரிகளிடம் வழங்கி வைத்த பிரதியமைச்சர் அமீர் அலி இங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலையில்லா பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வழங்குவது குறித்து பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவை இரண்டு முறை சந்தித்து கலந்துரையாடியுள்ளேன்.

அதில் முதலாவது சந்திப்பின் போது வேலையில்லா பட்டதாரிகளின் விபரங்களை தருமாறு பிரதம மந்திரி என்னிடம் கோரினார். பின்னர் இரண்டாவது சந்திப்பின் போது அந்த விபரங்களை நான் கையளித்தேன். எனது அலுவலகம் திறப்பதற்காக பிரதம மந்திரி வருகை தந்தபோதே இரண்டாவது தடவை சந்தித்தேன். இதன் போது நிதியமைச்சரும் இருந்தார்.

வேலையில்லா பட்டதாரிகள் அனைவரையும் பயிற்சியடிப்படையிலாவது உள் வாங்கி அவர்களுக்கான அரச தொழில் நியமனத்தை வழங்குமாறு கோரியுள்ளேன்.



இது அரசியலுக்காக நான் செய்யவில்லை. நானும் ஒரு பட்டதாரி என்ற வகையில் ஒரு பட்டதாரியின் மனோ நிலையை அறிந்தவன் என்ற வகையில் நான் இதை செய்தேன். கொட்டும் மழையிலும் வெயிலிலும் நீங்கள் ஒன்பதாவது நாளாக இவ்விடத்தில் அமர்ந்து சத்தியாக்கிரக போராட்டத்தினை நடாத்திக் கொண்டிருக்கின்றீர்கள். உங்களுக்கு ஒரு சாதகமான தீர்வு அரசாங்கத்திடமிருந்து குறிப்பாக பிரதம மந்திரியிடமிருந்து இன்னும் ஓரிரு நாட்களுக்குள் வருமென எதிர்பார்க்கின்றேன். மிகவும் கஷ்டப்பட்டு பல்கலைக்கழகங்களில் படித்து விட்டு தொழிலுக்காக இவ்வாறு போராட்டம் நடாத்த வேண்டியுள்ளது.

உங்கள் போராட்டம் வெற்றியளிக்க வேண்டும் அதற்கு என்னாலான இந்த முயற்சிகளை நான் செய்துள்ளேன் என்றார். மட்டக்களப்பு நகரில் வேலையில்லா பட்டதாரிகளின் சத்தியாக்கிரக போராட்டம் 9ஆவது நாளாக நேற்றைய தினமும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## உன்னஸ்கிரியவில் ஆர்ப்பாட்டம்

(மொஹொமட் ஆஸிக்)

கண்டி, உன்னஸ்கிரிய ஹெயார் பார்க் தோட்டத்தை தனியாருக்கு விற்பனை செய்வதை எதிர்த்து கடந்த செவ்வாயன்று பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

உன்னஸ்கிரிய ஹெயாபார்க் தோட்டத்தைச் சேர்ந்த 500 குடும்பங்களுக்கு இதனால் பாதிப்பு ஏற்படுவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

சுமார் 500 குடும்பங்களைச் சேர்ந்த 1800 பேர் இத் தோட்டத்தில வாழ்வதாகவும் இவர்களுக்கு தெரியாமல் தோட்டத்தை விற்பனை செய்ய நடவடிக்கை அரசு எடுத்து வருவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள தோட்ட தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கை தொழிலாளர் செங்கொடிச் சங்கம் உட்பட இனனும் சிலதொழிற் சங்கங்கள் இணைந்துஇவ் ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்துள்ளன.

நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள்; இவ் ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்டதுடன் உன்னஸ்கிரிய- லூல்வத்தை பாதையை மறித்து ஆர்பாட்டத்திலும் ஈடுபட்டனர். மேற்படி தோட்டத்தில் தமக்கு இரண்டு ஏக்கர் நிலம் வீதம் 500 குடும்பங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் அது வரை போராட்டம் தொடரும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

# பரீட்சைகளில் சித்தியெய்தியோருக்கு கிண்ணியாவில் பரிசளிப்பு விழா



(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா மகரூப் நகர் சன சமூக நிலையத்தின் ஏற்பாட்டில் க.பொ.த.சா/த மற்றும் 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கும் மற்றும் முன் பள்ளி பாடசாலை மாணவர்களுக்கும் பரிசளிப்பு வழங்கும் நிகழ்வு கிண்ணியா அல் ஹிரா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயத்தில் அண்மையில் அதன் தலைவர் ஏ.ஏ. அஷ்ரப் தலைமையில் நடை பெற்றது.

இதில் கிண்ணியா நகர சபை செயலாளர் யாழினி நரேந்திரநாத் பிரதம அதிதியாகவும் ,சன சமூக உத்தியோகத்தர்களான எம்.கே.பஸீர்,வசந்தி தேவராஜ், உள்ளூராட்சி உதவியாளர் ஏ.ஆர்.சுபைர்,அல் ஹிரா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலய அதிபர் பளீலா ,அல் ஹிரா தக்கியா பள்ளி தலைவர் உமர் ஜெகுபர்,றிழ்வானியா ஜும்ஆப் பள்ளி தலைவர் கன்சுல்லா,மன்சிபுல் கிண்ணியன்ஸ் நிறுவனத்தின் தலைவர் ஆர்.பாயிஸ் மற்றும் நகர சபை உத்தியோகத்தர்கள் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டு சான்றிதழ், நினைவுச் சின்னம் மற்றும் அப்பியாச கொப்பிகளை வழங்கி வைத்தனர்.

# கிண்ணியாவில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த பாடசாலைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குக

## மஹ்ரூப் எம்.பி கோரிக்கை

(கந்தளாய் எப்.முபாரக்)

கிண்ணியாவில் பரவி வருகின்ற டெங்கு நோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்தும் வரை கிண்ணியாவிலுள்ள பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்களைத் தற்காலிகமாக மூடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்ரூப் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிண்ணியாப் பிரதேசத்துக்கான அபிவிருத்திக் குழுக் கூட்டம் பிரதேச செயலகத்தில் திங்கட்கிழமை (27) நடைபெற்றபோதே அவர் இக்கோரிக் கையை முன்வைத் துள்ளார்.கடந்த சில தினங்களாக சுமார் 20 மாணவர்கள் டெங்குக் காய்ச்சல் காரணமாக தங்கள் பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்களின் அனுமதியுடன் இடைநடுவில் வீடுகளுக்குச் சென்றுள்ளனர். மேலும் பாட சாலைகளை அண்டிய சூழலிலும் நுளம்புகளின் நடமாட்டம் அதிகமாகக் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. எனவே கல்வித் திணைக்களத்தின் ஊடாக கிழக்கு மாகாண ஆளுநர் மட்டத்தில் இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். கிண்ணியாவில் டெங்குக்காய்ச்சல் காரணமாக இதுவரையில் 3 பேர் உயிரிழந்துள்ளதுடன் சுமார் 400 பேர் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கிண்ணியா தள வைத்தியசாலையிலும் திருகோணமலை பொது வைத்திய சாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# போலி சாரதி அனுமதிப்பத்திரங்கள் நாடெங்கும் புழக்கத்தில்

( மினுவாங்கொடை நிருபர் )

நாட்டின் பல பிரதேசங்களில் போலி சாரதி அனுமதிப் பத்திரங்கள் புழக்கத்தில் இருந்து வரும் நிலையில், மினு வாங்கொடை பகுதியிலும் இத்தகைய போலி சாரதி அனுமதிப் பத்திரங்கள் தயாரிப்பு நிலையமொன்று, மினுவாங் கொடை பொலிஸாரினால் முற்றுகை இடப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் அலுவலகத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை யடுத்தே இந்தப் போலி ஆவண நிலையம் சுற்றி வளைக்கப்பட்டதாக, மினுவாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

போலி சாரதி ஆவணங்களைப் பயன்படுத்துவோரைக் கைது செய்ய திடீர் பரிசோதனைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும், இதனைப் பயன்படுத்தி வாகனம் செலுத்துவோரை வளைத்துப் பிடிக்கும் நடவடிக்கைகள் துரிதமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில், விரிவான விசாரணைகள் தற்போது பொலிஸாரினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், போலி சாரதி ஆவணங்களைத் தயாரித்துக் கொடுப்போர் பல்வேறு இடங்களிலும் நடமாடித் திரிவதால், இது விடயத்திலும் எந்நேரமும் மிக அவதானமாகவும் விழிப்புடனும் செயற்படுமாறும், இதனை மீறுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், பொலிஸார் பொது மக்களையும் வாகனச் சாரதிக ளையும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



இந்திய முஸ்லிம் லீக் தலைவராக தெரிவுசெய்யப்பட்ட பேராசிரியர் கே.எம். காதர் மொஹிதீனுக்கு மனவை அசோகன் மற்றும் திருமதி மனவை அசோகன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்ததை படத்தில் காணலாம்.


### பெயர் மாற்றம்

30/2 குருவிகொடுவ, பஹமுனவை யைச் சேர்ந்த பாத்திமா ஹப்ஸா ஆகிய நான் கடந்த 2015 10 -29 ஆம் திகதியி லிருந்து பழைய பெயரானதேவந்திரராசா தேவிகா (தே.அ.இல - 926803700 V) என்ற பெயருக்குப் பதிலாக பாத்திமா ஹப்ஸா என்ற பெயரை மாற்றிக் கொண் டேன் என்றும் இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் அவ்வாறே ஒப்ப மிடுவேன் என்றும் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் அதன் மக்க ளுக்கும் அறியத்தருகின்றேன்.

- பாத்திமா ஹப்ஸா

### மர்ஹூம் நாகூர் நிகாஹ் சேவை

உண்மையான உறுதியான மஹர் அடிப் படையில் சிறந்த துணைகளைத் தேடித் தருவதற்கு எம்மை நாடவும். 30 வருட சேவையுடைய தர்ஹ் முகவர் M.A.S. Hameed (p.m), No. 460A, Mosque Lane, Kalmunaikkudy - 09. (077 3249459), N. Rahmathullah (R.I.)T.P:0772810009.WhatsApp:0779697790 Email - nrahmathullah786@yahoo.com

ලංකා සතොස
LANKA SATHOSA லங்கா சதொச

## தேசத்திற்கு விலையை நிர்ணயிப்பவர்

கைத்தொழில் மற்றும் வர்த்தக முறை அமைச்சு

### தேசத்திற்கு விலையை நிர்ணயிப்பவருடன் தொழில் வாய்ப்புக்கள்

லங்கா சதொச வலையமைப்பானது நாடு முழுவதும் 300ற்கும் மேற்பட்ட கிளைகளுடன் ரூபா.30 பில்லியன் புரள்வை கொண்ட இலங்கையின் பாரிய சில்லறை விற்பனை நிலைய வலையமைப்பாகும். நாம் எமது கீழ்காணும் குறிக்கோள்களை அடைய எதிர்பார்த்துள்ளோம்.

- வாழ்க்கை செலவை குறைத்தல்
- நாட்டு மக்களை வியாபாரங்களுடன் தொடர்புபடுத்தல்
- சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகளுக்கான வியாபார கோரலை நாடு முழுவதும் கொண்டு வர வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்தல்.

இதன் அடிப்படையில் நம் இலக்குகளை அடைவதுடன் எமது வியாபார நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்த எமது கிளைகளை 500 ஆக அதிகரித்து புரள்வை ரூபா.50 பில்லியனாக அதிகரிக்கும் நோக்கில் தொழில்சார் வல்லுனர்களை கீழ் காணும் வெற்றிடங்களுக்கு எதிர்பார்க்கின்றோம்.

### தலைமை நிர்வாக அதிகாரி

**எதிர்பார்க்கப்படும் தகைமைகள் :**

பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் கீழ் விஞ்ஞானம், விவசாயம், வணிக நிர்வாகம் அல்லது வேறு பொருத்தமான துறையில் இளங்கலை பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

விஞ்ஞானம், விவசாயம், வணிக நிர்வாக துறையில் முதுகலை பட்டம் பெற்றிறுப்பதுடன், குறிப்பிட்ட துறையில் அங்கீகாரம் பெற்ற தொழில் முறை பட்டய நிறுவனமொன்றில் அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.

அத்துடன்

நிறுவனம், நியதிச் சட்ட சபை / நிறுவனம் அல்லது பிரபல்யமான தனியார் நிறுவனத்தில் 05 வருட நிர்வாக மட்டத்தில் குறைந்தது 20 வருட முன் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் கீழ் விஞ்ஞானம், விவசாயம், வணிக நிர்வாகம் அல்லது வேறு பொருத்தமான துறையில் இளங்கலை பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் கீழ் விஞ்ஞானம், விவசாயம், வணிக நிர்வாகம் அல்லது வேறு பொருத்தமான துறையில் இளநிலை பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

நிறுவனம், நியதிச் சட்ட சபை / நிறுவனம் அல்லது பிரபல்யமான தனியார் நிறுவனத்தில் நிர்வாக மட்டத்தில் குறைந்தது 5 வருட முன் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை**

35 வயதிற்கு குறையாதவாரும் 55 வயதிற்கு மேற்படாதவாரும் இருத்தல் வேண்டும்.

நீங்கள் இத்தகைமைகளை கொண்டுள்ளீர்களெனின் உங்களுடைய சுயவிபரக்கோவையுடன், உங்கள் சான்றிதழ் பிரதிகளை இந்த விளம்பரம் பிரசுரமாகி 10 நாட்களுக்குள் எமக்கு கிடைக்கப்பெறுமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வையுங்கள்.
(விண்ணப்பிக்கும் பதவியினை உறையின் மேல் இடது கை பக்க மூலையில் குறிப்பிட்டு அனுப்பவும்.)

தலைவர்
வரையறுக்கப்பட்ட லங்கா சதொச,
இல: 108, நெக்ரிஸ் கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு-01

## நலம் வாழ

- செ.தர்ஷிகா



# கருப்பட்டியின் மருத்துவ மகிமை

பதநீரை காய்ச்சி அதிலிருந்து பெறப்படும் கருப்பட்டிக்கு சுவை, மணம் இருப்பதோடு மட்டுமல்லாமல், மருத்துவ குணமும் அதிகம் இருக்கிறது. கருப்பட்டியை இனிப்புக்காக மட்டும் பயன்படுத்த வில்லை. ஏனெனில் இதில் இருக்கும் கூடுதலான மருத்துவத் தன்மையின் காரணமாக இதை இன்றும் பயன்படுத்துகின்றனர்.

இயற்கையான முறையில் தயாரிக்கப்படும் கருப்பட்டியானது நமது உடலை சுத்தப்படுத்தி செரிமானத்திற்கும் பணிபுரிகிறது. பருவம் அடைந்த பெண்களுக்கு கருப்பட்டியையும், உளுந்தையும் சேர்த்து உளுந்தங்களி செய்து கொடுத்தால் இடுப்பு எலும்புகள் வலுப்பெறுவதுடன், கருப்பையும் ஆரோக்கியமாக இருக்கும். மாதவிடாய் காலத்தில் ஏற்படும் வயிறு வலியை போக்க கருப்பட்டி சாப்பிடலாம்.

சீரகத்தை வறுத்து சுக்கு மற்றும் கருப்பட்டி சேர்த்து சாப்பிட்டால், நன்கு பசி எடுக்கும். ஓமத்தை கருப்பட்டியுடன் சேர்த்துச் சாப்பிட்டால் வாயுத் தொல்லை நீங்கும். குப்பைமேனிக் கீரையுடன் கருப்பட்டியைச் சேர்த்து வதக்கிச் சாப்பிட்டால் வறட்டு இருமல், நாள்பட்ட சளித்தொல்லை நீங்கும். ஆண்மையை வீரியப்படுத்துவதிலும் கருப்பட்டிக்கு தனிப்பங்கு உண்டு. காபியில் சீனிக்கு பதிலாக கருப்பட்டிப் போட்டுக் குடித்தால் உடலில் சர்க்கரையின் அளவு கட்டுப்பாடாக இருக்கும்.

சர்க்கரை நோயாளிகளும் கூட கருப்பட்டியை கோபி போட்டுகுடிக்கலாம். இதில் கண்ணாம்புச் சத்தும், நோய் எதிப்பு சக்தியும் அதிகமாக இருக்கிறது.

சர்க்கரை நோயாளிகள், கைக்குத்தல் அரிசி சாதத்துடன் கருப்பட்டியைக் கலந்து சாப்பிட்டு வந்தால்.

சர்க்கரையின் அளவு கட்டுப்பாட்டில் இருப்பதுடன், அடிக்கடி சிறுநீர் போவதும் குறையும். உடலுக்கு தேவையான ஆற்றலை தரக்கூடிய உணவாக கருப்பட்டி கருதப்படுகிறது. இதை சர்க்கரை நோயாளிகளும் சாப்பிடலாம்.

# நீரிழிவு நோயாளர்களுக்கு ஏற்ற உடற்பயிற்சிகள்

காலையில் எழுந்து செய்யக் கூடிய மிக இலகுவானதும் பிரயோனசனமுள்ளதுமான சில உடற் பயிற்சிகள் பற்றிப்பார்போம். நிலத்தில் ஒரு விரிப்பை விரித்து முகம் குப்புற படுத்துக்கொள்ளவும், இரண்டு கைகளையும் முகத்திற்கு நேராக ஒன்று சேர்த்து வைத்து கையின் மேல் நாடியை வைத்துக் கொள்ளவும். இரண்டு கால்களையும் முழங் காலில் மடித்து மேலே உயர்த்தவும்.பின் வலது பக்கமாக முடிந்தவரை சாய்க்கவும். அடுத்து இடது பக்கமாக சாய்க்கவும்.முழங் காலில் நிற்கும் போது அடிவயிறு நிலத்திலிருந்து மூன்று அங்குலம் வரை உயர்ந்து கொண்டிருந்தால் நல்லது. இவ்வாறு ஒரு பத்துமுறை செய்யவும்.

பின் காலை பழைய நிலைக்கு கொண்டு வந்து அப்படியே திரும்பி வானத்தைப்பார்த்தவாறு படுத்துக்கொள்ளவும். மூச்சை மெதுவாக உள்ளிழுத்து மெதுவாக வெளிவிடவும். இரண்டுநிமிடம் கழித்து மீண்டும் திரும்பி முகம் குப்புற முன் போல் படுத்துக் கொள்ளவும். வலதுகாலை உயர்த்தி இடது முழங்காலைத் தொடவும். அப்போது இடது கால் நீண்டவாறு நிலத்தோடு இருக்க வேண்டும். பின் வலது முழங்காலை நீட்டி நிலத்தோடு வைத்துக்கொண்டு இடது காலை உயர்த்தவும். வலது முழங் காலைத்தொடவும். பின் பழைய நிலைக்கு வரவும். இவ்வாறு மாறி மாறி பத்து முறை செய்யவும்.



இப்பயிற்சி செய்யும் போது இரண்டு கால்களின் பாதங்களுக்கும் இடையில் இரண்டு அடிவரை உள்ளதாக கால்களை விரித்து வைத்துக்கொள்ளவும். பின் முகம் மேல்நோக்கிப்பார்த்த வண்ணம் பழைய நிலைக்கு வந்து மெதுவாக மூச்சை உள்வாங்கி வெளிவிடவும். இவ்வாறு இரண்டு முறை செய்யவும். அவ்வாறு கிடந்தவண்ணமே இரண்டு கைகளையும் தலைப்பக்கமாக நீட்டி நிலத்தோடு வைத்த வண்ணம் ஒரு கையின் பெருவிரலோடு மற்றக்கையின் பெருவிரலை பின்னிய வண்ணம் வைத்துக்கொண்டு மெல்ல உருளவும். அதாவது முகம்குப்புறத் திரும்பி, மீண்டும் அவ்வாறு ஒர் இடத்திலிருந்து மறு இடம் வரை மாறி மாறி உருண்டுகொண்டே செல்லவும். அதாவது, கோயிலைச் சுற்றி நிலத்தில் உருண்டுகொண்டு செல்வார்களே அவ்வாறே, நீங்கள் படுத்த இடத்திலேயே ஒரு பத்து அடி வரை உருளவும். பின் மீண்டும் உருண்டுகொண்டே இருந்த இடத்திற்கு வரவும். இவ்வாறு இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்குமாக ஒரு பத்து முறை உருளவும்.

பின் மேல் நோக்கிப்பார்த்து படுத்தவண்ணம் கையிரண்டையும் தொடையோடு சேர்த்த வண்ணம் வைத்துக்கொண்டு மெதுவாக மூச்சை உள்வாங்கி மெதுவாக வெளிவிடவும். மூச்சு வாங்கி வெளிவிடுதலை ஒரு ஐந்து முறை செய்யவும். இப்போது பயிற்சிகள் முடிந்துவிட்டன.

அப்படியே ஒரு ஐந்திலிருந்து பத்து நிமிடம் படுத்தவண்ணம் கிடக்கவும். பின் எழுந்து விடவும். இப்பயிற்சி உங்கள் சதையியிற்கு ஓர் உந்து சக்தியை கொடுக்கக்கூடியதாக இருக்கின்றது. செயற்பாடு குறைந்த சதையியிற்கு இரத்த ஓட்டத்தைக்கொடுத்து அதை நல்ல நிலையில் இயங்க வைப்பதால் நீரிழிவு நோயாளியின் இயக்கம் குறைந்த சதையில் புத்துயிருட்டப்பட்டு இன்சுலின் நன்கு சுரப்பதற்கு வழிவகுக்கக் கூடியதாக இருக்கின்றது.

அத்தோடு காலையில் இலகுவாக மலம் கழிக்கக்கூடியதாகவும் இருக்கின்றது. மலச்சிக்கலிலிருந்து விடுபடலாம். செய்து பாருங்கள் மிகவும் உடம்பிற்கு நல்ல பலன்தருவதை நீங்களே உணர்வீர்கள். உங்களுக்கு இயலுமானால் சக்தி உள்ளவர்கள் பத்து முறை செய்ய வேண்டிய பயிற்சியை இருபது முறை வரை கூட்டிக்கொள்ளலாம். நீரிழிவிற்கு மேற்கத்தேய மருந்து வகைகளை பாவிக்கக்கூடியவர்களாகவே இருப்பீர்கள்,அதை தவிர்க்க முடியாது. ஆனாலும் எங்களது வழிகாட்டல் உங்கள் உடலை மேலும் ஆரோக்கியமாக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. பெரும்பாலும் மேற்கத்தேய மதுருந்துப் பாவனை உடையவர்களாகவே நீரிழிவு நோயாளிகள் இருப்பதனால்அம்மருந்துப்பாவனையோடு தினமும் செய்து வரக்கூடிய ஒரு மருத்துவத்தையும் இங்குகுறிப்பிடுகின்றோம். விதை நீக்கிய கடுக்காய் 100கி, விதை நீக்கிய உலர்ந்த நெல்லிக்காய் 80கி, விதை நீக்கிய தான்றிக்காய் 60கி, என்ற அளவில் எடுத்து நன்கு தூளாக்கி, ஒருபுடவைத்துணியால் அரித்து வைத்துக்கொண்டு இரவில் சாப்பாட்டிற்குப் பின் இரண்டுபுளியம் விதை பிரமாணம் வாயில் போட்டு வெது வெதுப்பான சுடு நீர் பருகிக்கொள்ளவும்.

இம்மருந்துகள் மூன்றையும் மருந்துக்கடையில் வாங்கிக்கொள்ளலாம். (சிங்களத்தில் அரளு, புளு, நெல்லி என்று கேட்டு வாங்குங்கள்). இரத்தத்திலுள்ள வேண்டாத நச்சுப்பொருட்களை சிறுநீர் மூலமாகவும் மலம் மூலமாகவும் வெளியேற்றி இரத்தத்தைசுத்தமாக வைத்திருக்கும். இரத்தம் சுத்தமாக இருக்கும்போது நீரிழிவில் காணும் பல பக்கவிளைவுகள் அற்றுப் போகும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவும். இக்கட்டுரை உங்களுக்கு மிக்க பயனளிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எல்லோரும் இன்புற்றிருப்பதே எமது எண்ணமும், யாவருக்கும் சேவை செய்வதே எமது நோக்கமுமாக இருக்கின்றது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

முற்றும்

மேலதிக விளக்கம் தேவையாயின் உடன் தொடர்பு கொள்ளவும்.



Dr.Rauf Jabbar (R.A.M.P)
www.siddhahealth.net

Prevention and the treatment of diabetes.

## அறிவுலகம்



- வை.எம். ஆஷிக்

# ஹெட்போனின் பாதிப்புகள்



எங்கேயும், எப்போதும் ஹெட்போனுடன் இருப்பது தான் இப்போதைய பேஷன். செல்போனை நேரடியாகப் பயன்படுத்துவதால் அதில் இருந்து வரும் கதிர்வீச்சுகள் மூளையைப் பாதிக்கும். அதனால் ஹெட்போனைப் பயன்படுத்துவது நல்லது தானே என்பார்கள் விவரம் தெரிந்தவர்கள். ஆனால் ஹெட்போனை தொடர்ந்து பயன்படுத்தினால் அது வேறு சில பிரச்சினைகளுக்கு நம்மை கொண்டு சென்றுவிடும்.

எந்நேரமும் ஹெட்போனில் பாட்டு கேட்டுக்கொண்டே இருப்பவர்களுக்கு கேட்கும் திறனில் குறைபாடு ஏற்படும். அதிகமாக ஹெட்போன் பயன்படுத்துபவர்களுக்கு 'சென்ஸரி நியூரல் லாஸ்' எனப்படும் பாதிப்பு ஏற்படும். இதனால் காதுக்குள் இரைச்சல் கேட்கும். மேலும் தலைவலி, தூக்கமின்மை, ஒவ்வாமை போன்ற கூடுதல் உபாதைகளும் ஏற்படும். சாலை விபத்துகளில் கணிசமான விபத்துகள் ஹெட்போனில் பாட்டுக் கேட்டபடி வாகனம் ஓட்டுவதால் தான் நடக்கிறது.

காதில் இருந்து வெளிவரும் அழுக்கானது காதுகளின் உட்பகுதியிலேயே தங்க ஆரம்பிக்கும். இது நாளடைவில் அவர்களுக்கு அரிப்பை ஏற்படுத்தும். அதிக இசை அதிர்வினால் செவி மடலும் பாதிப்படைந்து காரணமே இல்லாமல் காது வலி வரும். ஹெட்போன் பழக்கத்தினால் தற்போது இளவயதிலேயே கேட்கும் திறன் பாதிக்கிறது. இதனால் வயதானவர்கள் பயன்படுத்தும் காது நன்றாக கேட்பதற்கான மெஷின்களை இளம் வயதிலேயே பயன்படுத்த நேரிடும் என மருத்துவர்கள் எச்சரிக்கிறார்கள்.

அதிகமாக ஹெட்போன் பயன்படுத்தினால் மன ரீதியாக பல பாதிப்புகள் ஏற்படுவதாக மனநல ஆலோசகர்கள் கூறுகிறார்கள். ஹெட்போன் மாட்டிக் கொண்டே பணியில் ஈடுபடும்போது நாம் செய்யும் வேலையில் கவனம் இருக்காது. இதனால் வேலையை சரியாக செய்ய முடியாது. டிரைவிங், வாக்கிங் என எப்போதும் பாட்டு கேட்டுக்கொண்டே இருப்பதால், வேலையை மெதுவாகத்தான் செய்ய முடியும் அல்லது தவறாக செய்ய நேரிடும். இதனால் கால விரயமும், சில சமயங்களில் பிரச்சினைகளும், விபத்துகளும் ஏற்படுகிறது. சிலர் ஹெட்போனில் பாட்டு கேட்டபடியே சாப்பிடுவார்கள். அந்த சமயத்தில் அவர்களுக்கு சாப்பாட்டில் கவனம் இருக்காது.

சுற்றி இருப்பவர்கள் நம்மை விட்டு விலகி இருக்க ஹெட்போன் முக்கிய காரணமாக இருந்து வருகிறது. மற்றவர்களுடன் மனம் விட்டு பேச வேண்டிய நேரங்களில் அதை தவறவிடும் சூழ்நிலை ஏற்படும். பிரச்சினையான நேரங்களில், இசையை கேட்பது மன அழுத்தத்தை குறைக்கும் என சிலர் நம்புகிறார்கள். மீண்டும் அந்த பிரச்சினை வெடிக்கும்போது அவர்களால் திடீரென முடிவெடுக்க முடியாமல் பெரிய மன அழுத்தத்துக்கு உள்ளாகிறார்கள்.

தொடர்ந்து ஹெட்போன் கேட்பதால் சிந்திக்கும் திறன், ஞாபக சக்தி குறையும். ஹெட்போனுக்கு அடிமையானவர்களுக்கு 'ஆடிட்டரி ஹாலுசினேஷன்' என்ற மனநோய் வரும். இதனால் அவர்களுக்கு ஹெட்போனை கழற்றிய பிறகும் பாடல்கள் ஒலிப்பது போலவும், யாராவது பேசுவது போலவும் இருக்கும்.

# அழிக்கப்படும் சிம்பன்சிகள்



குட்டி சிம்பன்சிகளை விற்கும் சட்டவிரோத வனவிலங்கு கடத்தல்காரர்களை பி.பி.சி.யின் புலனாய்வு வெளிக்கொண்டு வந்திருக்கிறது.

மேற்கு ஆபிரிக்க காடுகளில் இருந்து பிடிக்கப்பட்ட இந்த குட்டிகள், வளைகுடா நாடுகளிலும் சீனாவிலும் செல்லப் பிராணிகளாக விற்கப்படுகின்றன. சென்ற ஓராண்டாக ஆறு நாடுகளில் பி.பி.சி. செய்த புலனாய்வில் ஒரு குட்டி சிம்பன்ஸி பன்னிரெண்டரை ஆயிரம் டொலர்களுக்கு விற்கப்படுவது தெரியவந்துள்ளது.

2005 ஆம் ஆண்டுமுதல் குறைந்தது நாநூறு சிம்பன்ஸிகள் கடத்தப்பட்டிருக்கலாம் என ஐ.நா. புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

சிம்பன்ஸி குட்டிகளே இப்படி கடத்தப்படுகின்றன. ஒரு குட்டியை பிடிப்பதற்காக பத்து பெரிய சிம்பன்ஸிகள் கொல்லப்படுகின்றன.

சிம்பன்ஸிகள் உள்ளிட்ட குரங்கினங்களில் அறுபது சதவீதமானவை அழிவின் விளிம்பில் இருப்பதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

# பயனாளிகளுக்கு புதிய வசதி அறிமுகம்



முன்னணி சமூக வலைத்தளங்களில் ஒன்றான வட்ஸ் அப் நாளுக்கு நாள் தனது பயனாளிகளுக்கு புதுப்புது வசதிகளை செய்து கொண்டிருக்கும் நிலையில் அதன் பயனாளிகளின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வருகிறது. இந்நிலையில் ஃபேஸ்புக்கின் கிளை நிறுவனமாக விளங்கும் வாட்ஸ் அப் நிறுவனம் தற்பொழுது புதிய வசதி ஒன்றை அதன் பயனாளிகளுக்கு அறிமுகம் செய்துள்ளது.

இதுவரை வட்ஸ் அப்பின் ஸ்டேடஸ்ஸாக டெக்ஸ்டை மட்டுமே வைக்க முடிந்தது. இனி வட்ஸ் அப்பின் ஸ்டேட்டஸாக புகைப்படங்கள், ஜிப் மற்றும் வீடியோக்களை வைக்கும் வசதியை வாட்ஸ் அப் அறிமுகப்படுத்தியுள்ளது.

அதுமட்டுமின்றி இந்த ஸ்டேட்டஸ்கள் 24 மணி நேரத்தில் தானாக மறையுமாறு செய்யலாம். ஸ்டேட்டஸை குறிப்பிட்ட நபர்கள் மட்டும் பார்வையிடும் வகையில் அதனுடைய பிரைவசியில் மாற்றிக் கொள்ளவும் வசதி உண்டு.

இந்த புதிய வசதியினை முதற்கட்டமாக ஐரோப்பாவில் அறிமுகம் செய்யும் வட்ஸ் அப், இந்த வசதிக்கு கிடைக்கும் வரவேற்பை பொறுத்து இந்தியா உட்பட அனைத்து நாடுகளிலும் அறிமுகம் செய்யவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# மனித உடலில் புதிய உறுப்பு

மனித உடலில் இது வரை மறைந்திருந்த புதிய உறுப்பு ஒன்றினை அயர்லாந்தின் உடற்கூறியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். உடற்கூறியல் ஆய்வின் உச்சகட்டமாக கருதப்படும் இந்த உறுப்பை பற்றி அறிந்து கொள்வோம்.

உடற்கூறியல் வரலாற்றில் சுமார் 100 ஆண்டுகளாக மனித உடலில் மறைந்திருந்த புதிய உறுப்பு ஒன்றை அயர்லாந்தை சேர்ந்த உடற்கூறியல் ஆய்வாளர்கள் தற்போது கண்டுபிடித்துள்ளனர்.

மனித உடலின் குடல் பகுதியை வயிற்றுடன் இணைக்கும் 'நடுமடிப்பு' -(Mesentery) இத்தனை காலமாக பல்வேறு திசுக்கள் ஒன்றிணைந்த ஒரு அமைப்பாகவே கருதப்பட்டு வந்தது.

இந்நிலையில், அயர்லாந்தை சேர்ந்த லிமெரிக் பல்கலைக்கழகத்தின் ஜெ.கேல்வின் காப்பே என்ற ஆராய்ச்சியாளர் வயிற்றின் நடுமடிப்பு பகுதியானது, தொடர்ச்சியான உள் கட்டமைப்பினை கொண்டதொரு தனிஉறுப்பு என்று உறுதிப்படுத்தியுள்ளார்.



மற்ற உறுப்புகளை போல் இதனை அணுகும் போது, இந்த உறுப்பு தொடர்பான நோய்களை வகைப்படுத்தி, அவற்றை குணப்படுத்துவது எப்படி என்ற ரீதியில் அடுத்தகட்ட ஆய்வுகளை மேற்கொள்ள முடியும்.

உடலில் புதியதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள நடுமடிப்பு என்ற இந்த உறுப்பு தொடர்பாக மேற்கொள்ளப்படவுள்ள தொடர்ச்சியான ஆய்வுகளின் முடிவிற்கேற்ப, இந்த புதிய உறுப்பின் இயக்கம் குறித்து இன்னும் அதிகமாக அறிந்து கொள்ள முடியும்.

இதன் இயக்கம் குறித்த தகவல்கள் அறிந்து கொள்ளும்பட்சத்தில் வயிறு மற்றும் குடல் பகுதி சார்ந்து பல்வேறு நோய்களை எளிமையாக குணப்படுத்த முடியும் என ஆராய்ச்சியாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.











தொகுப்பு: இக்பால் அலி

# நீரைப் பராமரிப்பதற்கு இஸ்லாம் கூறும் வழிவகைகள்

அஷ்ஷெய்கி ரிஸ்வான் மதனி




மனிதனுடைய தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காக அல்லாஹ்வின் அற்புதமான படைப்பான நீரையும் தந்து அதனை எப்படி பராமரிக்க வேண்டும் என்று இஸ்லாமிய மார்க்கம் சிறந்த வழிகளையும் காட்டித் தந்துள்ளது என்று தைபா மற்றும் சமூக நல அபிவிருத்தி அமைப்பின் தலைவர் எம்.ஜே.எம். ரிஸ்வான் மதனி தெரிவித்தார்.

தைபா கல்வி மற்றும் சமூக நல அபிவிருத்தி அமைப்பினால் தெல்தோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரியில் சுமார் ஐந்து இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சுத்தமான குடி நீர்த் திட்ட திறப்பு விழா பாடசாலை அதிபர் ஐ. எம். ஜெமீல் தலைமையில் (23) இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட தைபா மற்றும் சமூக நல அபிவிருத்தி அமைப்பின் தலைவர் எம். ஜே. எம். ரிஸ்வான் மதனி தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,

அல்லாஹு தஆலா அல்குர்னில் தண்ணீரைப் பற்றிக் கூறியதாவது, ஆய்வு செய்த முஸ்லிம் அறிஞர்கள் 33 தண்ணீர் வகைப் பற்றிக் கூறப்படுவதாகக் கூறுகின்றனர். இது அல்குர்ஆன் அனைத்தையும் பேசியிருக்கிறது என்பதற்கான சான்றுகளில் ஒரு சான்றாகவும் இருக்கிறது. 19 நூற்றாண்டிலேதான் மனிதன் நீரைப் பற்றி சிந்தனை செய்தான் என்று கூறும் முஸ்லிம் ஆய்வாளர்கள் அல்குர்ஆன் அது இறங்குகின்ற சந்தர்ப்பத்திலே கூறியிருப்பதாகக் கூறுகின்றனர்.

வானத்திலிருந்து தேவையான அளவு தண்ணீரை இறக்கி வைத்திருக்கிறோம். பூமிக்கு அடியில் அல்லாஹ் தஆலா வைத்துள்ள அற்புதங்கள் பல இருக்கின்றன. கடல் இருப்பதைப் போன்று தண்ணீரையும் அல்லாஹ் அற்புதமாகக் குறிப்பிடுகின்றான். நீங்கள் ஒரு போதுமே தண்ணீர்கள் என்று எழுத மாட்டீர்கள். அது தமிழ் மொழி இலக்கண மரபுக்கு பிழையானது என்றுதான் கூறுவார்கள். ஆனால் அரபு மொழியிலே தண்ணீருக்கு ஒரு சொல்லும் தண்ணீர்களுக்கு இன்னுமொரு சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனை ஓர் ஆச்சரியமான முறையாக நாம் பார்த்தாலும் கூட உண்மையும் அதுதான். ஒரு வகை தண்ணீருக்கு அரபியில் மாவுமின் என்று கூறுவார்கள். பல வகையான தண்ணீருக்கு மிஅவுன் என்று கூறுவார்கள். இந்த இரண்டு சொல்லும் நபி (ஸல்) அவர்களுடைய சொற்களிலும் வந்திருக்கின்றன. அப்படி எனில் தண்ணீர் என்பது அல்ல. தண்ணீர்கள் என்றே அரபு பதம் எடுத்து இயம்புகின்றது. தண்ணீர் என்றே எம்முடைய நாவுகள் பேச்சு வழக்கில் பழகியபடியால் தண்ணீர் என்றே நாங்களும் பேசுகின்றோம். தண்ணீர்கள் என்று சொல்வதில்லை.

கடலை கடல்கள் என்று சொல்வது போல தண்ணீர்கள் என்று சொல்லி இருக்கிறது. அந்த அடிப்படையிலே அல்லாஹ் அல்குர்ஆனில் நிலத்தடி நீரைச் சொல்லிவிட்டு ஒரு செய்தியை எமது எல்லோருக்கும் ஓர் எச்சரிக்கையாகவும் சொல்லுகிறான். நிலத்தடி நீர் தேக்கி வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நான் நாடினால் அந்த நிலத்தடி நீரும் உறிஞ்சப் படும் என்று கூறுயிருக்கிறான். நிலத்தடி நீர் ஒரு நாள் வற்றி விட்டால் அப்படி உறிஞ்சப்படுமாக இருந்தால் நல்ல நீர் ஊற்றை உங்களுக்கு கொண்டு வருபவர்கள் யாராக இருப்பார்கள்? என்று எம்மைப் படைத்த அல்லாஹ் கேள்வி எழுப்புகிறான். அதனால் தான் ஓர் அடியான் உணவு உண்ணுகின்ற போதும் நீரைப் பருகின்ற போதும் பிஸ்மில்லா என்று சொல்லி அவன் உண்ண வேண்டும். நீரோ உணவோ அதனை உட்கார்ந்துதான் உட்கொள்ள வேண்டும். அதற்காக அவன் அல் ஹம்துலில்லாஹ் என்று சொல்ல வேண்டும். எமது மார்க்கத்தில் நீர் குடிப்பதற்கும் ஓர் ஒழுங்கை மார்க்கம் சொல்லிக் கொடுத்துள்ளது.

நீரில் ஊதக் கூடாது என்கிறது. மூச்சு விடக் கூடாது என்கிறது. மிடறால் குடிக்க வேண்டும் என்கிறது. பிஸ்மில்லாஹ் என்று ஆரம்பித்து அல்ஹம்துலில்லாஹ் என்று முடிக்கும் போது கூற வேண்டும் எனக் கூறுகின்றது.

இது பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறும் போது சொல்லப்படும் பிஸ்மில்லாஹ்வும் இறுதியாகச் சொல்லப்படுகின்ற அல்ஹம்துலில்லாஹ்வும் அல்லாஹ்வுடைய நேசத்தைப் பெற்றுத்தருவதாகக் கூறினார்கள். அல்லாஹ் தந்த தண்ணீரைக் குடிக்கின்ற மனிதன் அல்லாஹ்வுடைய பெயரைச் சொல்லி அவனுடைய தேவையை நிறைவேற்றிக் கொள்ளவதற்காக இப்படி அ இஸ்லாமிய மார்க்கம் அற்புதமான அருள்களையும் தந்து சிறந்த வழிகளையும் காட்டித் தந்துள்ளது.

எமது இதயங்கள பற்றி ஓர் இடத்தில் சூறத்துல் பகராவில் கூறும் போது குர்ஆனை செவிமடுக்காத இதயங்கள், நபி (ஸல்) அவர்களுடைய போதனைகளை செவிமடுக்காத இதயங்கள், நெகிழ்வில்லாத இறுக்கமான இதயங்கள் பற்றியும் பேசப்படுகின்றது. இதயங்களை பல முறையில் அறிஞர்கள் பிரிப்பார்கள். அதிலே ஓர் இதயம் காபிரான இதயம் என்று சொல்வார்கள். நோயற்ற இதயம் என்று சொல்வார்கள். இந்த இதயங்கள் இறுக்கமாக ஆகிவிடுமாக இருந்தால் நரகத்திற்குத்தான் அந்த இறுக்கமான இதயமுடையன் செல்வான் என்று கூறுவார்கள்.

அல்லாஹ் அதனை கற்பாறைகளுக்கு உதாரணமாகச் சொல்லி இந்தக் கற்பாறைகளை விட கேவலம் கெட்டவர்கள் என்று சொல்லப்படுகிறது. இந்தக் கற்பாறைகளில் சிலவற்றில் நீர் ஊற்றுக்கள் வடிந்து வருவதை நீங்கள் பார்ப்பீர்கள். எனவே இந்தப் பாடசாலைக்கு வழங்கி வைக்கும் நீர் கற்பாறைகளிலிருந்து வரும் நீரே இங்கு வழங்கப்படுகிறது.

மிகவும் வரட்சிக் காலத்தில் தோண்டப்பட்ட இந்தக் கிணறு நீருக்கு குறைவின்றி இப்பாடசாலையில் கல்வி பயிலும் 1000க்கும் மேற்பட்ட மாணவர்கள் 24 மணி நேரமும் குடிப்படிதற்கான தண்ணீர் இந்த கற்பாறையிலிருந்து கிடைக்கிறது. அல்லாஹ்வின் மிகப் பெரிய அருள் கற்பாறையிலிருந்து கிடைக்கின்ற நீராகும். எந்தவிதமான மருந்தையும் கலந்து பாவிக்க வேண்டும் என்பது கிடையாது. பரிசுத்தமான நீர் இப்பாடசாலைக்கு கிடைப்பதையிட்டு நாம் சந்தோசப்படுகின்றோம்.

எமது இதயத்தைப் பற்றி அல்லாஹ் கூறும் போது அந்தக் கற்பாறைகளில் சில அல்லாஹ்வின் அச்சத்தால் கீழே விழுந்து விடுவதாகக் கூறுகிறான். கற்பாறைகள் சில நீரூற்றைக் கொண்டு வருகிறது. அது நமக்குப் பயனளிக்கிறது. சில அல்லாஹ்வின் அச்சத்தால் விழுந்து விடுகிறது. இந்த இரண்டும் இல்லாத இறுக்கமான மனிதனாக நீர் இருக்கிறாய் என்று சொல்லி அல்லாஹ் தண்ணீர் தருகின்ற மலைகளையும் சுட்டிக் காட்டுகின்றான் எனவே தண்ணீர் அல்லாஹ்வுடைய சொத்து. அவனுடைய ஓர் அருள், யாருக்கும் கொடுக்க முடியும். கொடியவன் நல்லவன், காபிர், என அவனுடைய படைப்புக்கள் யாவற்றுக்கும் பயன்தரக் கூடியது. அல்லாஹ்வின் அருளைப் பெற்ற நாங்கள் இந்த தண்ணீர் உதவியைப் பெற்றுத்தந்த சவூதி நாட்டுச் செல்வந்தர்களுக்காக பிரார்த்தனை செய்யுமாறு வேண்டுகிறேன்.

---

# சுதந்திரம் மற்றும் நீதி தொடர்பான ஆலோசனைகளை திருத்தியமைத்தல்

சூரி ரத்னபால

(நேற்றைய தொடர்ச்சி...)

மரபு ரீதியாக புரிந்து கொள்ளப்பட்ட சட்ட ஆட்சியானது,

(1) சகல பகிரங்க மற்றும் தனியார் செயல்கள், பொதுவாக உருவாக்கப்பட்ட சட்டத்திற்குக் கட்டுப்படுவதோடு அவை பொது மற்றும் தனிநபரைக் குறிக்காத நியமங்கள் தொடர்பில் சுதந்திர முடிவு எனும் பொருளில் விசேட பெறுபேறுகளை எய்துவதற்கு பணிக்கப்பட்டவையல்ல என்பதாகும்; மற்றும்

(2) பொதுவாக பிரஜைகள் ஏதேனும் சர்வாதிகாரத்திற்கு கட்டுப்பட வேண்டுமென வற்புறுத்தப்படவில்லையாதலால், முன்னுதாரணத்தில் உள்ளது போன்று பொதுவான தனிநபரைக் குறிக்காத மற்றும் சுதந்திர நியமத்தின் முடிவு எனும் வடிவமைப்பை மேற்கொள்ளவில்லை.

இந்த இரண்டு விடயங்களும் அடிப்படையில் ஒன்றிணைந்தவை, ஒன்று மற்றையது இன்றி நிலைத்து நிற்க முடியாது. முதலாவது விடயம் பேணப்படும் அதேவேளையில் இரண்டாவது விடயம் வழக்கறுவுற்றது எனும் நம்பிக்கையிலிருந்து அரசியலமைப்பு கொள்கை பற்றிய பாரிய எண்ணக்கரு வழு ஏற்பட்டது. பிரசை ஒருவரை எழுந்தமான கட்டளை மூலம் வலுக்கட்டாயப்படுத்தும் தத்துவமுடைய அதிகாரி அத்தத்துவத்தின் மூலம் மாகாணம் தொடர்பாக பொதுச் சட்டத்தின் பேரில் கட்டுப்பட முடியாது. பொதுச்சட்டம் பிரதியீடாகும் பட்சத்தில் மட்டுமே எழுந்தமான கட்டளைக்கான தத்துவம் / அதிகாரம் உருவாக்கப்படலாம். அதிகாரி ஒருவர் தனிநபரைக் குறிப்பிடாத முறையில் பொருட்களின் விலையை நிர்ணயிக்கும் வேளையில், சுயமாக முடிவுறும் ஒப்பந்தங்கள் அவரது தீர்மானங்களைப் பிரதியீடு செய்வது அவதானிக்கப்பட வேண்டும். அதிகாரி ஒருவர் அனுமதிப் பத்திரத்தை மறுப்பதன் மூலம் வர்த்தகத்தைத் தடை செய்து ஒப்பந்தம் தொடர்பான 'தந்திரம் பிரதியீடு செய்யப்பட்டு நீண்ட காலப்போக்கில் பொதுச் சட்டக் கோட்பாடாக இருக்கவில்லை. இரண்டாவது விடயத்திலிருந்து பெறப்பட்ட வலுக்குறைப்புகளானது முதலாவது விடயத்திலிருந்து தன்னிச்சையாக உருவாகிய வலுக்குறைப்புகளாகும். ஏனெனில், எழுந்தமான கட்டளைத் தத்துவத்தையுடைய அதிகாரிகள் சட்டத்திற்கு மேலாக இடப்பட்டுள்ளனர். அத்தகைய அதிகாரிகள் சட்டத்தின்கீழ் செயற்படுகின்றனர் என்பது பிழையாகும். பொதுச்சட்டத்தை வலுக்குறைப்புச் செய்வதில் தனிநபர் விடயங்களுக்கென அவர்கள் சட்டங்களை உருவாக்க வேண்டும். சட்டவாக்க மன்றின் (பாராளுமன்றின்) அதிகாரத்தின் / தத்துவத்தின் கீழ் எப்போதும் செயற்படும் அதிகாரிகளின் சட்ட ஆட்சிக்னெ இது போதுமானதல்ல. எழுந்தமான செயலை அதிகாரமளிப்பதிலிருந்து சட்டவாக்கமன்று மட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

### சுதந்திரம் மற்றும் நீதி தொடர்பான ஆலோசனைகளை திருத்தியமைத்தல்

சட்ட ஆட்சியின் கீழ் மட்டும் சாத்தியமாகும் சுதந்திரம் மற்றும் நீதி ஆகியவற்றுடன் நெருக்கமான தொடர்புடைய விழுமியங்களை உள்ளடக்கும் ஏனைய இரு எண்ணக்கருக்களின் திருத்தியமைத்தல் மூலம் சட்ட ஆட்சியின் மீள் உருவாக்கம் வலுப்படுத்தப்படுகிறது. சந்தைப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட நாகரிகம் தொடர்பில் இந்த இரண்டு எண்ணக்கருக்களும் மிக முக்கியமான தேவைப்பாடுகளாகும். மறுதலையாகப் பார்க்கையில், மனித உள்ளத்திலிருந்து பெற்ற இந்த ஆலோசனைகளின் தத்துவ / அதிகார வலிமையானது, அவர்களின் சமூகத்தை மீள வடிவமைக்கும் மற்றும் அவர்களை மீள வரைவிலக்கணப்படுத்துவதன் மூலம் சட்ட ஆட்சி மற்றும் அரசியலமைப்பு அரசாங்கம் ஆகியவற்றுக்கு கணிப்பிட முடியாத தீங்கு பயப்பதாகும். மனித சிந்தனை மொழியால் மத்தியஸ்தம் செய்யப்படுகிறது. உரைப்பகுதிகளுக்கு அப்பால் எதுவும் காணப்படுவதில்லை எனும் Derrida என்பவரின் வாதத்தை நாங்கள் ஏற்க மறுத்த போதிலும், மொழியானது நாங்கள் செல்ல நினைப்பதை மட்டும் மட்டுப்படுத்தாது, எமது சிந்தனையையும் கட்டமைப்புச் செய்கிறது. மொழி என்பது மரபுவழி வந்த உற்பத்தியாகும். கூர்ப்பு ரீதியான முறையில், மொழிசார் சனசமூகரத்தின் புரிந்துணர்வின் ஒருங்கமைந்த பெறுபேறு மொழியாகும். 'யானை' எனும் சொல்லை கூறுகையில், அனேகமான ஆங்கில மொழி பேசும் மக்களுக்கு நாங்கள் புரிந்த கொள்வது பற்றிய சிந்தனை உண்டு. ஆனால் 'நீதி' எனும் சொல்லை நாங்கள் கூறுகையில், அதன் பொருள் தொடர்பில் அவர்கள் ஏற்க மறுக்கின்றனர். ஏனெனில் சில சொற்கள் தொடர்பில் ஏனைய சொற்களைவிட நன்கு அறியப்பட்ட பொருள் (கருத்து) உண்டு. சொற்களின் பொருள் (கருத்து) தொடர்பாக அவை பொருளாதார மற்றும் அரசியல் ரீதியில் கையாளப்படுகையில் வேறுபடுகின்றன. 'யானை' எனும் சொல்லின் பொருளை நலிவடையச் செய்யும் வழிமுறை என்னிடமில்லை. மறுதலையாக, 'நீதி' எனும் சொல் தொடர்பில் கூடுதல் ஊக்குவிப்பு செய்ய முடிவது எவ்வாறெனில் அதற்கு உலகளாவிய ரீதியிலான பெறுமதியான மற்றும் அதை எதிர்ப்பது மிகவும் கடினமாகும். நீண்ட விளக்கமுடைய மொழி மூலமாக அழிவுறும் தாராளமயமான கருத்தியல் பற்றிய தாக்குப்பிடிக்கும் திறன் தொடர்பில் அனேக லிபரல்வாதிகளை விட ஏச்தூனுடு என்பவர் சிறந்த புரிந்துணர்வு உடையவர் (1976 83, 2:2 - 15, 62 - 66) 'தந்திரம், நீதி, சட்டம் மற்றும் சனநாயகம் ஆகிய சிந்தனைகள் தொடர்பிலான எண்ணக்கருவாக்கத் தெளிவை தக்கவைத்துக் கொள்வதற்கான அவரின் முயற்சிகள் சுதந்திர அரசியலமைப்பை மிளிரச் செய்து, அதற்கு எதிராகத் தொழிற்படும் புதிய சக்திகள் பற்றி ஏனையோர் அறிந்து கொள்வதற்கும் உதவி புரிந்தது.

சுதந்திரம் தொடர்பாக மீள்வரைவிலக்கணம் செய்தல்

சுதந்திரம் என்பது தெரிவுகளை வரையறை செய்யும் பௌதீக முட்டுக் கட்டைகளிலிருந்து தெளிவாக மனித முகவர்களினால் மேற்கொள்ளப்படும் எழுந்தமான தலையீடு அற்றநிலை என மரபுரீதியாகப் பொருள்படும். நான் சுதந்திரமற்று உள்ளேன் என கருதவில்லை. ஏனெனில், சட்டத்தின் பிடியிலிருந்து நான் விலகிச் செல்ல முடியவில்லை. எனவே சுதந்திர அரசியலமைப்பு பற்றிய பரிசீலனையில் மிக முக்கியத்துவம் பெறவது யாதெனில், பௌதீக உணர்வில் சுதந்திரம் என்பதற்கும் மனித உறவு முறையில் சுதந்திரம் எனும் உணர்விற்குமிடையிலான வேறுபாடு ஆகும். எனினும், இருபதாம் நூற்றாண்டில் இந்த வேறுபாடு அரசியல் உரையாடலில் மழுங்கிப்போய்விட்டது. எவ்வாறெனில், சுதந்திரம் மற்றும் சட்ட ஆட்சி ஆகியவற்றின் திடீர் முடிவுகளால் ஆகும். 'ஒருவருக்கு சுதந்திரத்தை அனுபவிக்கும் வழிமுறைகள் இல்லாதபோது அந்த நபர் எவ்வாறு சுதந்திரமாக இருக்கமுடியும்'? எனும் வினா அரசியல் மற்றும் தத்துவார்த்த விவாதங்களில் முக்கிய இடத்தைப் பெற்றது. சுதந்திரம் மற்றும் சுதந்திரத்தை அனுபவிக்கும் ஆற்றல் ஆகிய இரண்டும் இடதுசாரி அரசியல் சிந்தனையில் ஒன்றிணைந்து கொண்டது.

சுதந்திரம் மற்றும் நிலைபேறுக்கான ஆக்கபூர்வ ஆற்றல் ஆகியவற்ஙறில் உள்ளடக்கப்படும் முற்போக்குவாதிகளின் இந்த விவாதத்திற்கு இரண்டு பண்புகள் உள்ளன. முதலாவது, சுதந்திரம் மழுங்கடிக்கப்பட்டது ஏனையவர்களின் எழுந்தமான வலுக்கட்டாயத்தினால் மாத்திரமல்லாது சுதந்திரத்தை அமுல்படுத்துவதற்கு மக்களிடம் காணப்பட்ட பௌதீக வளப்பற்றாக்குறையும் காரணமாக. எவரேனும் சுதந்திரத்தினை நடைமுறைப்படுத்த முன்ன சுதந்திரம் கிடைக்கப்பெறுவது மாத்திரமல்லாது, அதாவது சுதந்திரத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பௌதீக முட்டுக்கட்டைகள் தடை ஏற்படுத்தினால், சுதந்திரம் கிடைக்கப்பெறாது என்பதே வாதமாகும். இந்த வாதத்தின் தன்மை நலிவடைவது எவ்வாறெனில், எவரேனும் குறிப்பிட்ட ஆண் பௌதீக முட்டுக்கட்டைகள் தொடர்பில் பொறுப்பாளியாக இல்லாதபோது எந்த ஒரு சட்டமும் அந்த பௌதீக முட்டுக்கட்டைகளை அகற்றமாட்டாது. எனவே நாங்கள் புவியீர்ப்பு விதி அல்லது வெப்ப இயக்கவியலின் இரண்டாம் விதி ஆகியவற்றிற்கு அப்பால் சட்டவாக்கம் செய்ய முடியாது. எனவே வாதத்தின் இரண்டாவது பண்பு தேவைப்படுகிறது.

சீர்திருத்தவாதிகள் சந்தர்ப்ப முடிவுகளாக அமையாத பௌதீக வளப்பற்றாக்குறை போன்ற சில பௌதீக முட்டுக்கட்டைகளை உறுதிசெய்த போதிலும், பல செயற்பாடுகளின் திறன் விளைவுகளாக அவற்றை உறுதிசெய்கின்றனர். எனவே, சில மக்களின் சுதந்திரம் மழுங்கடிக்கப்படுவதற்கு சமூகம் முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டுமென குற்றஞ்சாட்டப்படுகிறது. உடைமைகளை வைத்திருப்பதற்கான சுதந்திரம், ஒப்பந்த சுதந்திரம் மற்றும் சமூகத்தில் முழுமையான சுதந்திரமட்டத்தை அதிகரித்தல் போன்ற சில சுதந்திர தலையீடுகளை வரைபுபடுத்துவதற்கு சமூக மற்றும் பொருளாதாரத் தொடர்புகளில் வலுக்கட்டாயச் சீர்செய்தல் சுதந்திரத்தின் மேம்பாட்டிற்கு அவசியமாகின்றது என்பதே இந்த உறுதிப்பாடுகளின் முடிவாகும். இந்த வாதம் சுதந்திரத்திற்கு எதிரான சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்ட வழக்காக பிரதிபலிப்பதோடு அதன் வேறுபாடுகள், குறிப்பாக சமூகத்தின் குறைந்த நன்மைபெறும் பிரிவுகளில் பரவலாக உள்ளது. இக்கொள்கைக்குச் சாதகமாக வெற்றியளிக்கும் வகையில் வாதம் இடம்பெறும் இடமெல்லாம், மக்கள் ஏழைகளாகிவிட்டனர். எனவே இந்த முன்மொழிவானது இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றில் பொய்யாகிவிட்டது. (தொடரும்)

# உள்ளூராட்சி மன்ற தேர்தலை விகிதாசார முறையில் நடாத்தவும்

## எஸ்.எம்.மரிக்கார் எம்.பி



(அஷ்ரப் ஏ.சமத்)

தற்போதைய தேர்தல் முறைமையில் உள்ள விருப்பு வாக்குமுறையே இம்முறையும் உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கு சிறந்ததாகும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம் மரிக்கார் தெரிவித்தார்.

நேற்று ஐ.தே.கட்சியின் தலைமையக மான சிறிக்கொத்தவில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் 5500இற்கும் மேற்பட்ட உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகள் 8 ஆயிரமாக அதிகரித்துள்ளனர். இதனால் பொது மக்களது பணம், வரி வீண்விரயமாகும். அத்துடன் எல்லை நிர்ணய முறைமை பற்றியும் சிறுபான்மையினர்களுக்கு அநீதி விளைவிக்கப்படுகின்றது. இவ்விடயத்தில் மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா தமது அறிக்கையை மீள் பரிசீலனை செய்தல் வேண்டும்.

நாளை தேர்தல் நடைபெற்றாலும் ஐ.தே.கட்சியே வெற்றியடையும் ஆனால் ஸ்ரீ.ல.சு.கட்சியில் இருந்து கூட்டு எதிர்க்கட்சியினர் படுதோல்வியடைவார்கள். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இந்த நாட்டினை அடகு வைத்து எடுக்கப்பட்ட கடன்களை எமது அரசு வட்டியுடன் செலுத்தி வருகின்றது. 2016ஆம் ஆண்டு மட்டும் 18,28 பில்லியன் கடன் செலுத்தப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டு 2417 பில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு 2019ஆம் ஆண்டு வரை செலுத்தல் வேண்டும். அத்துடன் இக் கடன் தொகை மும்மடங்காக 4000 பில்லியன்களாக அதிகரிக்கின்றது. இலங்கையின் வரலாற்றில் இவ்வாறானதொரு பெருந்தொகை கடன் பெற்றமை மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியிலாகும்.

இந்த ஆட்சியினை ஏற்படுத்தியது ஐ. தே.கட்சி கூட்டுக் கட்சிகளாகும். 2020ஆம் ஆண்டு அடுத்த பாராளுமன்ற தேர்தல் வரும் மட்டும் இதனை யாராலும் தடுக்கவோ குறுக்கு வழியில் ஆட்சிக்கு வரவோ முடியாது. மேலும் பாராளுமன்றத்தின் ஊடாக வட கிழக்கு பிரச்சினைக்கு புதிய அரசியலமைப்பில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## திருகோணமலை நீர்வழுங்கல் பிரிவுக்கு பிரான்ஸ் தூதுக்குழு வருகை



(கிண்ணியா ஹஸ்பர் ஏ ஹலீம் )

பிரான்ஸ் நாட்டின் இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதுவர் எச்.இ.ஜீன் மெரின் சுச் செவ்வாயன்று திருகோணமலை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை கிழக்கு பிராந்திய சேவை நிலையத்துக்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டுள்ளார்.

இவ்ஏழு பேர் அடங்கிய குழுவினர் நீர் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் மற்றும் எதிர்கால நீர் திட்டம் தொடர்பான கலந்துரையாடல்களை இதன் போது மேற்கொண்டதுடன் கிழக்கு மாகாண நீர் வழங்கல் திட்டங்களை கிழக்கு உதவி பொது முகாமையாளர் என்.சுடேசன் தூதுவர் குழுவுக்கு தெளிவுபடுத்தியதுடன் 2006 தொடக்கம் 2012 வரையான திட்டங்களை இதன்போது மார்ச் 1ஆம் திகதி மதிப்பிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிரதான காரியாலய மேலதிக பொதுமுகாமை யாளர் ரூன்வீஸ் கிழக்கு மாகாண உதவி பொது முகாமையாளர் என்.சுடேசன், தென்கிழக்கு உதவி பொது முகாமையாளர் சொய்சா உட்பட திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை பொறியியலாளர்களும் இதன் போது பங்கேற்றனர்.

## திருகோணமலை வளாகத்தில் ஆர்ப்பாட்டமும் பணிப்பகிஷ்கரிப்பும்

(கிண்ணியாஸஹ்ரின் எம் இஸ்மத்)

பரீட்சை முடிவுகள் வெளியிடப்படாத தைக் கண்டித்து கிழக்கு பல்கலைக்கழக திருகோணமலை வளாக மாணவர்களையும், மாணவர்களின் அடாவடித்தனங்களையும் நிறுத்திவையுங்கள் எனக் கோரி கல்விசாரா மற்றும் கல்விசார் ஊழியர்களும் திருகோண மலை வளாகத்தில் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

திருகோணமலை வளாகத்தைச் சேர்ந்த சுமார் 500க்கு மேற்பட்ட மாணவர்களும் அதேவேளை 85,மேற்படி வளாக ஊழியர்களும் நேற்றையதினம் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

கடந்த வருடம் மார்ச் மாதமளவில் வளாகத்துக்குள் இடம் பெற்ற தமிழ், சிங்கள மாணவர்கள் மோதல் காரணமாக வளாக நிர்வாகம் சித்தமருத்துவத் துறையைச் சேர்ந்த ஐந்து மாணவர்கள்களுடைய 2ஆம், 3ஆம் தவணைப் பரீட்சை முடிவுகளையும் இதேபோன்று வணிகக் கல்வி தொடர்பாடல் முகாமைத்துவ பிரிவைச்சேர்ந்த 9 சிங்கள மாணவர்களுடைய 3ஆம் ஆண்டு தவணைப் பரீட்சை முடிவுகளையும் வளாக நிர்வாகம் இன்னும் வெளியிடவில்லையெனக் கூறியே நேற்றையதினம் சித்தமருத்துவப் பிரிவு வணிகக்கல்வி தொடர்பாடல் முகாமைத்துவம் மற்றும் பிரயோக விஞ்ஞான பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 500க்கு மேற்பட்ட மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளைதங்கள் பரீட்சை முடிவுகளை வளாக நிர்வாகம் வெளியிடவில்லை யென்பதற்காக தங்கள் வளாகத்தை விட்டு வெளியே செல்லாமல்.

செவ்வாய்க்கிழமை சுமார் இரவு 11.00மணி வரை தடுத்து வைத்திருந்த மாணவர்களின் அடாவடித்தனங்களை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் எனக்கோரி கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்கள்,நேற்று பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர் . இது விடயம் தொடர்பாகவளாக நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது இரண்டுடொரு தினங்களில் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப்படுமெனத் தெரிவித்தனர்.

# வாழைத்தோட்டத்தில் இலவச நடமாடும் சேவை



(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

கொழும்பு வாழைத்தோட்ட ஏழை மக்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு வாழைத்தோட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் அமீரின் ஏற்பாட்டில் அமீர் பவுண்டேசனின் அனுசரணையுடன் வாழைத்தோட்ட பொலிஸ் நிலையமும் கொழும்பு கிரேண்ட் நோர்த் 306- பி2 லயன்ஸ் கழகமும் இணைந்து நடாத்திய நடமாடும் சேவை அண்மையில் கொழும்பு-12 சுச்சரித மாவத்தையில் இடம் பெற்றது.

இதன்போது இரத்தப் பரிசோதனை, தேசிய அடையாள அட்டை சேவைகள், இலவச மூக்குக்கண்ணாடி வழங்கல் போன்ற சேவைகளும், வறிய பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கல் நிகழ்வுகளும் இடம் பெற்றன.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கொழும்பு பிரதான பொலிஸ் நிலையத்தின் ஓ.ஐ.சியும் சட்ட அதிகாரியுமான கே.ஏ.எஸ் டபிள்யு. குமாரஜீவ மற்றும் கெசல்வத்த பொலி;ஸ் நிலையத்தின் சப் இன்ஸ்பெக்டர் ரத்ன கோட்டேகொட , ஸ்ரினி ஜெயவீர, லயன்ஸ் கழகத்தின் தலைவர் டாக்டர் வசந்தராஜ் உள்ளிட்ட லயன்ஸ் கழக உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கெசல்வத்த பொலிஸ் நிலையத்தின் சப் இன்ஸ்பெக்டர் ரத்ன கோட்டேகொட பிரதம அதிதியாக கலந்து கொண்ட பிரதான பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் இன்ஸ்பெக்டர் குமாரஜீவவிற்கு நினைவுச்சின்னம் வழங்குவதையும் அருகில் அமைப்பாளர் அமீர் உள்ளிட்ட பிரமுகர்களும் படத்தில் காணப்படுகின்றனர்.

## மாணவர்களிடம் நல்லிணக்கத்தை ஏற்படுத்த விசேட வேலைத்திட்டங்கள்

(மினுவாங்கொடை நிருபர்)

நாட்டின் பல பாகங்களிலும் இயங்கும் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்கும் முஸ்லிம், தமிழ், சிங்கள மாணவர்கள் மத்தியில் நல்லிணக்கத்தையும், ஐக்கியத்தையும் வலுப்படுத்தும் நோக்கிலான விசேட வேலைத் திட்டங்கள் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளன.

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகமும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் இணைந்து, இவ்விசேட வேலைத் திட்டங்களை அமுல்படுத்தவுள்ளன. இதன்பிரகாரம், பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம், மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா அழகியற் கலைபீடம், தென் கிழக்கு, யாழ், ருகுணு மற்றும் பிக்கு பல்கலைக் கழகங்களிலும் இந்த வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த வேலைத் திட்டங்களுடன் இணைந்ததாக, பல்கலைக் கழகங்களில் நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், முரண்பாடுகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல் ஆகிய விடயங்களை அடிப்படையாகக் கொண்ட கற்கை நெறிகளை அறிமுகம் செய்யவும் இந்த நிர்வாகங்களினால் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

## வலம்புரி கவிதா வட்டத்தின் 34ஆவது பௌர்ணமி கவியரங்கு



(எம்.எஸ்.எம். ஸாகிர்)

வலம்புரி கவிதா வட்டத்தின் 34வது பௌர்ணமி கவியரங்கு அண்மையில் கொழும்பு அல் ஹிக்மா கல்லூரியில் நடைபெற்றது. வகவச் செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் நிகழ்வினை நெறிப்படுத்தினார். கவியரங்கு சுடர் ஒளி ஞாயிறு வெளியீடு பிரதம ஆசிரியர் ராதா மேத்தா தலைமையில் நடைபெற்றது.

இக் கவியரங்கில் கவிஞர்கள் எம். பிரேம்ராஜ், தாஜ்மஹான், கவிக்கமல் ரஸீம், சுபாஷிணி பிரணவன், வெளிமடை ஜஹாங்கிர், உணர்ச்சிப் பூக்கள் ஆதில், தேஜாஸ்ரீ பிரணவன், ஆஷிகா ராஹிலா ஆலம், அப்துல் அஸீஸ், ஜொயெல் ஜோன்சன், மட்டக்களப்பு க. லோகநாதன், மலாய்கவி டிவங்கோ, வாழைத்தோட்டம் எம். வஸீர், ஜைலா பார்த்திபன் (ஒளி அரசி), எஸ். தனபாலன், கம்மல்துறை இக்பால் ஆகியோர் தங்கள் கவிதைகளை தொகுத்து வழங்கினர்.

மறைந்த ஸ்தாபகச் செயலாளர் கவின் கமல் இர்ஷாத் கமால்தீன் நினைவாக வெளியிடப்பட்ட படிகள் சஞ்சிகை அதன் ஆசிரியர் வசீம் அக்ரம் மற்றும் கட்டுரை ஆசிரியர் டாக்டர் தாசிம் அகமது ஆகியோரினால் வகவத்திற்கு கையளிக்கப்பட்டது. அதனை செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன், சத்திய எழுத்தாளர் எஸ்.ஐ.நாகூர் கனி, மேமன்கவி, ஈழகணேஷ் ஆகியோர் வகவ சார்பாகப் பெற்றுக்கொண்டனர். கலைவாதி கலீல், ஒளி அரசி சஞ்சிகை ஆசிரியர் ஆர். ஜனாதன், நாச்சியாதீவு பர்வீன், யாழ் அஸீம், ஏ.எம். எஸ்.உதுமான், அ.ரெளிபேட், இப்னு அஸூமத், நஹீதா சப்னம், கவிநேசன் நவாஸ், 'நிஜம்' நிஜாம் போன்றோரம் கலந்துகொண்டனர்.

# வேப்பங்குளம் பள்ளிவாசல், குடியிருப்புக்களை மீளப்பெற்றுத்தருமாறு மக்கள் கோரிக்கை

(எம்.ஏ.றமீஸ்)

வில்பத்து வனப்பிரதேசம் என அடையாளமிடப்பட்டுள்ள பகுதியில் அமையப் பெற்றுள்ள வேப்பங்குளம் அந்-நூர் ஜும்ஆ பள்ளிவாசல் ஆண்டாண்டு காலமாக தாம் பராமரித்து வந்ததாகவும் அப்பள்ளிவாசலையும் அங்குள்ள மக்கள் குடியிருப்புப் பகுதிகளையும் மீளவும் எமக்கு பெற்றுத்தர சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அம்பாறை மாவட்ட உடகவியலாளர் சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட வடபுல நல்லிணக்கப் பயணத்தின்போது வில்பத்துப் பிரதேசத்தினை இவ்வமைப்பில் உள்ள ஊடகவியலாளர்கள் நேற்றுமுன்தினம்(28) பார்வையிடச் சென்றபோதே அப்பிரதேச மக்கள் ஊடகங்களுக்கு இக்கருத்தினை முன்வைத்தனர்.

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தலைவர் மீரா எஸ்.இஸ்ஸடீன் தலைமையில் சென்ற ஊடகவியலாளர் மத்தியில் தொடர்ந்தும் அப்பிரதேச மக்கள் கருத்துத் தெரிவிக்கையில், பன்னெடுங்காலமாக தொன்று தொட்டு நாம் இப்பிரதேசத்தில் வாழ்ந்து வந்தோம். யுத்த கால சூழலில் நாம் வெளியேற்றப்பட்டு சமாதானச் சூழலில் மீளவும் இங்கு வந்தபோது எமது குடியிருப்புப் பகுதிகளும் மதக்கடமையினை நிறைவேற்றி வந்த வேப்பங்குளம் அந்-நூர் ஜும்ஆ பள்ளிவாசலும் கடந்த 2002ஆம் ஆண்டு விஷேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் விலங்கியல் பாதுகாப்புத் திணைக்களத்தினால் வில்பத்து தேசிய பூங்காவாக அறிவித்தல் செய்யப்பட்டுள்ளது.

எமது பூர்வீக நிலங்களின் உண்மைத் தன்மையினை ஆராய்ந்து அதனை மீளவும் எம்மிடம் ஒப்படைப்பதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## கண்டியில் வரட்சி நீங்கி கடும் மழை

(வத்துகாமம் நிருபர்)

கண்டி மாவட்டத்தில் பல மாதங்களாக நிலவிய வரட்சியான கால நிலையில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் கடும் மழை பொழிய ஆரம்பித்துள்ளது.

அத்துடன் இது வரை நீர் வற்றிக் காணப்பட்ட பல்வேறு நீர் நிலைகளில் நீர் பெருக்கெடுத்தோட ஆரம்பித்துள்ளது.

கண்டி மஹியங்கனை வீதியில் உள்ள உன்னஸ்கிரிய பிரதேசத்தில் நீரின்றி வரண்டு காணப்பட்ட பம்பரகல ஓயா நீர் வீழ்ச்சி உட்பட மற்றும் பல நீர் வீழ்ச்சிகள் பழைய நிலையையடைந்து நீர் வழிந்தோட ஆரம்பித்துள்ளது.



சம்மாந்துறை முபோ நெனசல நிலையத்தில் கற்கை நெறிகளை பூர்த்திசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை அப்துல் மஜீட் மண்டபத்தில், முபோ நெனசல நிலையத்தின் பணிப்பாளர் கே.எல்.எம். ஸகி தலைமையில் நடைபெற்றது. நிகழ்விற்கு பிரதம அதிதியாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், அரச கரும மொழிகள் திணைக்கள ஆணைக்குழு அங்கத்தவருமான ஏம்.எம்.எம். நௌசாத் கலந்து கொண்டார். இந் நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள். (கியாஸ் ஏ. புஹாரி)

# கலை நுணுக்கங்கள் கொண்ட இஸ்லாமிய கட்டடக்கலை

**எம்.எல். முஹம்மட் ஹெல்பான்,**
உதவி விரிவுரையாளர்,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
ஒலுவில்.



இஸ்லாமிய நுண் கலைகளில் ஒன்றாக கட்டடக்கலை விளங்குகின்றது. இக்கலையானது அல்குர்ஆன் சுன்னாவின் வழியில் வளர்ச்சியுற்ற ஒன்றாகும். இவை பள்ளிவாயல்கள்,அரண்மனை மாடங்கள்,மருத்துவ நிலையங்கள்,கோட்டைகள் மத்ரஸாக்கள், நினைவுச் சின்னங்கள், பல்கலைக்கழகங்கள் போன்றவற்றினூடாக வெளிப்பட்டுக் காணப்படுகின்றது. இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன்பே அரேபியாவில் கட்டடங்கள் காணப்பட்ட போதும் இஸ்லாத்தின் தோற்றத்துடனேயே முஸ்லிம்களின் கட்டடக்கலை ஆரம்பமாகியது. ஜாஹிலிய்யாக் காலத்தில் வாழ்ந்த ஹுஸைன் என்பவரின் காலத்தில் பல கட்டடங்கள் காணப்பட்டதுடன் அவருக்கு என தனியான மாளிகை ஒன்றும் நிறுவப்பட்டது.

மேலும் தாருந் நத்வா எனும் மக்கள் கூடும் ஆலோசனை மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டது. அத்துடன் கஃபத்துல்லாஹ்வை அபிசீனியத் தச்சன் பாகன் என்பவர் உடைந்த கப்பல் ஒன்றின் பகுதிகளைக் கொண்டு அவரது சுதேசப் பாணியில் புனர்நிர்மாணம் செய்தார். இவ்வாறு ஜாஹிலிய்யாக் காலத்தில் காணப்பட்ட கட்டட நுணுக்கங்கள், அடுத்து வந்த முஸ்லிம்களுக்கு கலைத் திறன்களை இலகுவாகப் பெற்றுக் கொடுத்தது.

கி.பி. 06ம் நூற்றாண்டில் நபி (ஸல்) அவர்களின் வருகையுடன் கட்டடக்கலையானது வேறு பாணியில் செல்லத் தொடங்கியது. நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செல்லும் போது குபா எனும் இடத்தில் ஆரம்பப் பள்ளிவாயலை நிர்மாணித்தார்கள். பின்னர் கி.பி. 623ல் மதீனாவில் மஸ்ஜிதுன் நபவியைக் கட்டினார்கள். இது கலை நுணுக்கம் பேணாது சாதாரணமாகக் கட்டப்பட்டது. நாற் சதுர வடிவிலான செங்கற்களினாலும், கருங்கற்களினாலும் கட்டப்பட்டதாக வரலாறு எடுத்தியம்புகின்றது. இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் கால கட்டடக்கலையானது மஸ்ஜிதை மையப்படுத்தி வளர்ச்சி கண்டது.



மிம்பர்

இஸ்லாமிய கட்டடக் கலையின் அடுத்த கால கட்டமாக விளங்குவது நான்கு கலீபாக்களைக் கொண்ட குலபாஉர் ராசிதூன்கள் காலமாகும். முதலாம் கலீபா இஸ்லாத்தை நிலை நிறுத்துவதிலும்,போலி நபிமார்களை அடக்குவதிலும் கவனம் செலுத்தியதால் கட்டடக்கலையில் ஆர்வம் காட்டவில்லை. எனினும் உமர் (ரழி) அவர்களின் காலத்தில் நாகரிகத்தில் உயர்ந்து விளங்கிய பைசாந்திய, பாரசீக வல்லரசுகள் இஸ்லாத்தில் நுழைந்ததால் இஸ்லாமிய சாம்ராஜ்யம் விரிவடைந்தது. மக்களின் சமூக, அறிவியல் மற்றும் பொருளாதாரத் தேவைகளுக்காக பள்ளிவாயல்களையும், அரசாங்க கட்டடங்களையும், இராணுவக் கட்டடங்களையும் மற்றும் கல்வி நிறுவனங்களையும் அமைக்கும் பணியில் முஸ்லிம்கள் ஈடுபட்ட போது வேறு நாட்டவர்களின் நுணுக்கங்களை இஸ்லாமிய கலைக்குள் புகுத்தினர். உஸ்மான் (ரழி) அவர்களதும், சுபைர் (ரழி) அவர்களதும் வீடுகள் மிகவும் பிரமாண்டமானதாக காணப்பட்டதாக வரலாறுகள் எடுத்துக்காட்டுகின்றன. இவ்வாறு குலபாஉர் ராசிதூன்கள் காலத்தில் மக்காவிலும், மதீனாவிலும், கூபா, பஸரா, பக்தாத் போன்ற நகரங்களில் கட்டடங்கள் கற்களினாலும், அழகிய தூண்களினாலும் நிர்மாணிக்கப்பட்டு பல வர்ணக்கற்களால் வேலைப்பாடுகள் செய்யப்பட்டன.

உமையாக்கள் காலத்தில் டமஸ்கஸில் மாளிகைகளையும், மஸ்ஜிதுகளையும் கலீபாக்கள் கட்டினார்கள். அவற்றில் கலை நுணுக்கங்கள் புகுத்தப்பட்டன. சிறந்த சிற்பிகளைக் கொண்டு அவை வடிவமைக்கப்பட்டன. பைசாந்திய, பாரசீக கட்டடங்களோடு ஸ்பெய்ன் நாட்டு கலை நுணுக்கங்கள் உமையாக்கள் கால கட்டடக்கலையில் காணப்படுகின்றன.

டமஸ்கஸ் காலத்தில் ஜெரூசலத்தில் அமைக்கப்பட்ட குப்பத்துஸ் ஸஹ்ரா என்பது புகழ்பெற்ற ஒன்றாகும். கி.பி. 690ல் நிர்மாணிக்கப்பட்ட இம்மஸ்ஜிதில் தான் முதன் முதலாக கும்மட்டம் அமைக்கப்பட்டது. எண்கோண அடித்தலத்தை உடைய இக்கட்டிடத்தின் அடியில் வட்டமான அடித்தளத்தையும், மேலே கும்மட்டத்தையும் கொண்ட மண்டபம் அமைக்கப்பட்டது. இக்கும்மட்டத்தை 12 தூண்கள் தாங்கி நிற்கின்றன. இதனிடையே மாடங்கள் அமைந்துள்ளன. கலீபா வலீதின் காலத்தில் கி.பி. 8ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட டமஸ்கஸ் பள்ளிவாயல் உமையாக்கள் கால கட்டடக் கலையில் சிறந்த ஒன்றாகும். இவை மட்டுமன்றி துறவிகள் மாடங்கள், பொது குளியல் அறைகள், நீர்த்தடாகங்கள் என்பன இக்காலத்தில் அமைக்கப்பட்டன.

இஸ்லாமிய கட்டடக்கலை வரலாற்றில் பக்தாத்தைத் தலைநகராகக் கொண்ட அப்பாஸியர் காலப்பகுதி மிகவும் முக்கியமான ஒன்றாகும். மஸ்ஜித் கட்டடக்கலையோடு மாளிகைக் கட்டடக்கலை, உமையாக்கள் காலத்தை விட இக்காலத்தில் சிறப்பாக வளர்ச்சியடைந்தது. தூலுசினிய வம்சத்தின் காலத்திலேயே இக்கலை சிறப்பாக வளர்ச்சியடைந்தது. சாமர்ரா கலை எனும் பாரசீகர்களின் கலைகள் இக்காலத்தில் முஸ்லிம்களின் கலைகளுடன் இணைந்து கொண்டன.

இஸ்லாமிய கட்டடக்கலை வரலாற்றில் பாத்திமியர்களின் காலப்பிரிவு மிகவும் முக்கியமானதாகும். புகழ் பெற்ற அல் அஸ்ஹர் பள்ளிவாயல் இக்காலத்திற்குரியதாகும். மேலும் மம்லூக்கிய ஆட்சியாளர்களினால் மத்ரஸாக்கள், கோட்டைகள், மருத்துவமனைகள், கால்வாய்கள் என்பன நிர்மாணிக்கப்பட்டன. அல் பீமனிஸ்தான் அல் மன்ஸில்'' எனப்படும் மருத்துவ நிலையம் அரபெஸ்கி வேலைப்பாடுகளுடன் இணைந்து மிகவும் பிரமாண்டமானதாக காணப்படுகின்றது. இவை கணித வேலைப்பாடுகள் கொண்ட அரபெஸ்க் கூபி எழுத்துக்களைக் கொண்டு வடிவமைப்புச் செய்யப்பட்டது.

இவ்வாறு இஸ்லாமியக் கட்டடக்கலை பாரம்பரியமானது நபி (ஸல்) அவர்களின் காலத்திலிருந்து படிப்படியாக முன்னேறிக் கொண்டு தற்காலத்தில் அதற்கான தனியான பல்கலைக்கழகங்களை உருவாக்கும் அளவுக்கு வளர்ச்சியடைந்து வருகின்றது.



கும்மட்டம் அல்லது குப்பா

முஸ்லிம்களது கட்டடக்கலையில் மஸ்ஜித்கள் பிரதான இடத்தை வகிக்கின்றது. ஆரம்ப காலத்தில் கலை நுணுக்கங்கள் காணப்படாத போதிலும் சாம்ராஜ்ய விஸ்தரிப்பினால் ரோம, பாரசீக, பைசாந்தியக் கலை நுணுக்கங்கள் இஸ்லாமிய கலைஞர்களினால் உருவாக்கப்பட்டு கேத்திர கணித, தாவர, விண்மீன் கலை வடிவங்கள், அரபு எழுத்தணி, கிரீல் வேலைப்பாடுகள், மாபில் வேலைப்பாடுகள், பூ வேலைப்பாடுகள் என்பனவற்றைக் கொண்டு புதிய வடிவில் அலங்கரிக்கப்பட்டது.



மிஹ்ராப்


முஸ்லிம்களின் மஸ்ஜிதில் மிம்பர், மிஹ்ராப், மினாரா, குப்பா, மாடவில் என்பன பிரதானமான பகுதிகளாகக் காணப்படுகின்றன. அவற்றைப் பின்வருமாறு நோக்குவோம்.

**மிம்பர்**

இது குத்பா மேடை என அழைக்கப்படுகிறது. நபி (ஸல்) அவர்களே முதன் முதலில் மிம்பரை அமைத்தார்கள். ஈச்சம் குற்றியினால் செய்யப்பட்டதாக மிம்பர் காணப்பட்டது. பிற்பட்ட காலங்களில் இரும்பு, செங்கற்கள்,சலவைக் கற்கள் போன்றவற்றை உபயோகித்து கலை நுணுக்கம் பேணி அழகிய வடிவங்களிலும், வித்தியாசமான அளவுகளிலும் அமைத்தனர். அம்ரிப்னு ஆஸ் பள்ளிவாயலில் மிம்பர் முதன் முதலாக கட்டடக் கலையின் ஓர் அம்சமாக சேர்க்கப்பட்டது. மிம்பர்கள் படிக்கட்டுக்களைக் கொண்டதாகவும் வளர்ச்சியடைந்தன. அவற்றின் வலது, இடது பக்கங்கள் கிரீல்களோடு அமைந்த கற்களினாலும், தூண்களினாலும், கும்மட்டங்களினாலும் அழகுபடுத்தப்பட்டன. மேலும் அவை அரபு எழுத்தணி, அரபெஸ்கி போன்றவற்றால் மெருகூட்டப்பட்டது.

**மிஹ்ராப்**

தொழுகையின் திசையைக் காட்டுவதற்காகவும்,தொழுகையின் போது இமாம் தனித்து நிற்பதற்காகவும் இது அமைக்கப்பட்டது.பின்னர் கட்டடக்கலையின் ஓர் அம்சமாக மாறியது. இது இஸ்லாத்திற்கு முன்பே தோற்றம் பெற்றாலும் முஆவியா (ரழி) அவர்கள் தன்னைப் பாதுகாப்பதற்காக தனது கவர்னர்களாக இருந்த மஸ்லமா இப்னு முஹல்லம், அப்துல் அஸீஸ் இப்னு மர்வான் ஆகியோருக்குக் கட்டளையிட்டு இதனை அமைத்தார். முதலில் அரை வட்ட வடிவில் இருந்தமிஹ்ராப்பின் உச்சி காலப்போக்கில் கூர் முனையுடையதாகவும், குதிரை லாட வடிவினதாகவும் அமைக்கப்பட்டு பல்வேறு நிறங்களினாலும், அரபு எழுத்து வடிவங்களினாலும் மெருகூட்டப்பட்டன. பாத்திமிக்கள் காலத்தில் மிஹ்ராப்பிற்கு வெள்ளியாளான முலாம் பூசப்பட்டது. எகிப்திலுள்ள அம்ரிப்னு ஆஸ் பள்ளிவாயலை இதற்கு ஆதாரமாகக் கூறலாம். மேலும் சில இடங்களில் மிஹ்ராப்கள் தூண்கள் கொண்டவையாக அமைந்தன. மிஹ்ராபின் அழகிய வடிவங்களை ஹைரவான் மஸ்ஜிதிலும், சைத்தூன், குர்துபா, ஜாமிஉல் அஸ்ஹர் பள்ளிவாயல்கள் என்பவற்றில் காணக்கூடியதாக உள்ளது.



மினாரா

**மினாரா**

இது இஸ்லாமிய கட்டடக் கலையின் முக்கிய பகுதியாக அமைந்துள்ளது. தொழுகைக்குபாங்கு சொல்லி அழைப்பதற்காக அமைக்கப்பட்டது. உமையா கலீபா முஆவியா (ரழி) காலப்பகுதியில் அவரின் வேண்டுகோலுக்கு இணங்க திமிக்ஸ் பள்ளிவாயலில் முதன் முதலாக மினாரா அமைக்கப்பட்டது. அவ்வாறே கலீபா வலீதின் காலத்தில் சிரியா, ஹிஜாஸ் பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்ட பள்ளிவாயல்களில் மினாராக்கள் அமைக்கப்பட்டது.ஆரம்ப கால மினாராக்கள் உச்சியை அடைவதற்கான படிக்கட்டுக்கள் கொண்டனவாகக் காணப்பட்டன. பிற்பட்ட காலங்களில் கூம்பக வடிவில் மினாராக்களை நிறுவி அதற்குள்ளே படிக்கட்டுக்களை அமைத்தனர். அப்பாஸிய ஆட்சியில் நாற் சதுர, செவ்வக,உருளைவடிவினதாகவும் தட்டுக்கள், அறைகள் என்பனவற்றை உள்ளடக்கியதாகவும் மினாராக்கள் அமைக்கப்பட்டன. எகிப்து, சிரியா பகுதிகளில் காணப்படும் மினாராக்கள் செவ்வக வடிவினதாகவும் துருக்கி, பாரசீக மினாராக்கள் உருளை வடிவினதாகவும் அமைந்து காணப்படுகின்றன.

**கும்மட்டம் அல்லது குப்பா**

கும்மட்டம் என அழைக்கப்படும் இது உமையாக்கள் காலத்தில் தோன்றி வளர்ந்தது. ஹிஜ்ரி 7ம் நூற்றாண்டில் கலீபா வலீதினால் பைத்துல் முகத்திஸ் புனநிர்மானம் செய்யப்பட்ட போது முதல் கும்மட்டம் அமைக்கப்பட்டது. வட்டவடிவில் அமைந்த கும்மட்டத்தை நான்கு பிரதான தூண்களும், 12 சிறிய தூண்களும் தாங்கி நின்றன. இவற்றிடையே வில் போன்ற மாடவில்லுக்கள் அமைக்கப்பட்டு கதவுகளிலும், ஜன்னல்களிலும் வெண்கல குமிழ்கள் பொருத்தப்பட்டன. பிற்பட்ட காலங்களில் மத்ரஸாக்களிலும் குப்பாக்கள் அமைக்கப்பட்டன.



மாடவிற்கல்

**மாடவிற்கல்**

முஸ்லிம்களினது கட்டடக்கலையின் மற்றொரு கூராக மாடவிற்கல் அமைந்துள்ளன. பள்ளிவாசலின் மேலே அமைக்கப்படும் வளைவாக இம்மாடவிற்கல் காணப்படுகின்றன. அரைவட்டமான இது கூர்முனை மாடவில்,குதிரை லாடமானமாடவில்கல் எனப் பல வடிவங்களில் அமைக்கபட்டன. இவை தவிர இமாம் தங்குவதற்கான அறை, வுழூச் செய்வதற்கான நீர்த்தடாகம், மலசலகூடம் என்பன கட்டடக் கலையின் கூறுகளைக் காண்பிக்கின்றன.

எனவே மேற்கூறப்பட்ட விடயங்களை நோக்கும் போது நபி (ஸல்) அவர்களின் காலத்தில் உயிரூட்டப்பட்ட முஸ்லிம்களின் கட்டடக் கலையானது ஒவ்வொரு காலப் பகுதியிலும்பல்வேறு அம்சங்களை தம்மோடு இணைத்துக் கொண்டு இஸ்லாமிய நுண்கலைகளுள் தமக்கென ஓர் உயரிய இடத்தினை பெற்றுக் கொண்டதைக் காணக்கூடியதாக உள்ளதோடு, இதன் பரிணாம வளர்ச்சி இன்றும் கூட இடம் பெற்றுவருவதை உலகில் உள்ள அழகிய மஸ்ஜிதுகள் எடுத்துக் காண்பிக்கின்றன என்று கூறினால் அது மிகையாகாது.





அமெரிக்காவின் 45ஆவது ஜனாதிபதியாக பொறுப்பேற்றுக்கொண்டுள்ள டொனால்ட் டிரம்ப் நேற்று பாராளுமன்றத்தில் கன்னி உரை நிகழ்த்தியபோது.....

விசா கட்டுப்பாடு விவகாரம்:

# ஈராக்கிற்கு விதிவிலக்களித்து ஜனாதிபதி டிரம்ப் உத்தரவு



அமெரிக்காவில் நுழைய விதிக்கப்பட்ட தடையிலிருந்து ஈராக் மக்களுக்கு விதிவிலக்கு அளித்து, ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

அமெரிக்காவுக்குள் நுழைய சிரியா அகதிகளுக்கு தடை, 7 முஸ்லிம் நாடுகளுக்கு விசா தடை, மெக்சிகோ எல்லையில் சுவர் கட்டும் திட்டம் உள்ளிட்ட அமெரிக்க குடியுரிமை மற்றும் வெளியுறவு கொள்கையில் புதிய ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் முடிவுகள் அமெரிக்க மக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவில் நுழைய விதிக்கப்பட்ட தடையிலிருந்து ஈராக் மக்களுக்கு விதிவிலக்கு அளித்து டிரம்ப் உத்தரவிட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து அமெரிக்காவினுள் நுழைய விதிக்கப்பட்ட தடையிலிருந்து ஈராக் தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளது.

விசா தடையிலிருந்து ஈராக்கை நீக்கக்கோரி, பென்டகன் மற்றும் மாநிலத் துறை வெள்ளை மாளிகைக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்ததைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், அமெரிக்காவில் நுழைய ஈரான், லிபியா, சோமாலியா, சூடான், யெமன், சிரியா ஆகிய நாடுகளுக்கு விதிக்கப்பட்ட விசா தடை இன்னும் தொடர்கிறது.

# இங்கே சுத்தமான காற்று விற்கப்படும்

அரைலீற்றர் ரூ.14 ஆயிரம்



சுவிட்சர்லாந்தில் ஆல்ப்ஸ் மலைக் காற்றை போத்தலில் அடைத்து நபர் ஒருவர் விற்பனை செய்து வருவது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சுவிட்சர்லாந்தில் பேசல் மாகாணத்தில் குடியிருந்து வரும் பிரித்தானியர் ஒருவர் இந்த புதுவகையான வியாபாரத்தை முன்னெடுத்துள்ளார்.

ஆல்ப்ஸ் மலைக்காற்றினை போத்தல்களில் அடைத்து விற்பனைக்கு வைத்திருக்கும் இவர், அதில் கிடைக்கும் வருவாயின் ஒருபகுதியை தொண்டு நிறுவனங்களுக்கு அளிக்கவும் திட்டமிட்டுள்ளார்.

தற்போது அரைலீற்றர் முதல் 3 லீற்றர் போத்தல்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் இந்த மலைக்காற்று உரிய ஆவணங்களும் இணைக்கப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆல்ப்ஸ் மலையின் மிகவும் பிரத்தியேகமான பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்ட சுத்தமான காற்று என அந்த நிறுவனத்தின் இணைய பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐஸ் போன்று உறைய வைக்கப்பட்ட போத்தல்களில் இருந்து வாடிக்கையாளர்கள் மிகவும் சுத்தமான ஆல்ப்ஸ் மலைக் காற்றை சுவாசித்து உணர முடியும் என அந்த நிறுவனம் உறுதி அளிக்கின்றது.

சுவிட்சர்லாந்தின் Zermatt பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்ட காற்றினை மிகவும் பாதுகாப்புடன் போத்தல்களில் அடைக்கப்பட்டு தங்கள் நிறுவனத்தின் பெயருடன் கூடிய ஆவணமும் இணைத்து வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதாக நிறுவனத்தின் உரிமையாளர் கிரீன் தெரிவித்துள்ளார்.

அரை லீற்றர் ஆல்ப்ஸ் காற்றின் விலை 97 டொலர் (இலங்கை மதிப்பில் ரூ.14,695). ஒரு லீற்றர் விலை 167 டொலர் எனவும் 3 லிற்றர் போத்தலின் விலை 247 டொலர் எனவும், இது அனைத்துவகை கட்டணமும் உள்ளடகிய விலை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 20 ஆண்டுகளாக சுவிட்சர்லாந்தின் பேசல் பகுதியில் குடியிருந்து வரும் ஜோன் கிரீன், இந்த காற்று வணிகத்தை மக்களுக்கான தொண்டாக கருதி செய்து வருவதாக தெரிவித்துள்ளார்.

# இத்தாலியில் குமுறும் எட்னா



இத்தாலியின் கிழக்கு சிசிலி தீவிலுள்ள எட்னா என்ற எரிமலையானது நேற்றுமுன்தினம் முதல் வெடிக்கத் தொடங்கியுள்ளது. இந்த எரிமலை வெடிப்பின் காரணமாக அப்பகுதியிலிருந்து பொதுமக்கள் வெளியேறிவருகின்றனர்.

## உலகச் செய்திகள்

கிம்-ஜோங்-நம் கொலை விவகாரம்:

# இரு பெண்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல்



வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங்-உன்னின் சகோதரர் கிம் ஜோங்-நம் கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள இரு பெண்கள் மீதும் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங்-உன்னின் சகோதரர் கிம் ஜோங்-நம், கடந்த 13ஆம் திகதி மலேசிய தலைநகர் கோலாலம்பூர் விமான நிலையத்தில் மர்மமான முறையில் திடீரென மரணம் அடைந்தார். விமான நிலையத்தில் அமர்ந்திருந்த அவரது முகத்தில் 2 பெண்கள் தடை செய்யப்பட்ட 'வி எக்ஸ்' என்ற கொடுமையான இரசாயன விஷப்பவுடரை வீசி கொலை செய்ததாக கூறப்படுகிறது.

இக்கொலை தொடர்பாக இந்தோனேசியா மற்றும் வியட்நாமை சேர்ந்த 2 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட பெண்கள் இருவரின் மீதும் கொலைக் குற்றம் சாட்டி குற்றப்பத்திரிகை தயார் செய்யப்பட்டுள்ளதாக அரச வழக்கறிஞர் தெரிவித்த நிலையில் இரு பெண்கள் மீதும் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

குற்றம்சாட்டப்பட்டுள்ள இரு பெண்களும் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் மலேசிய தலைநகருக்கு வெளியே அமைந்துள்ள நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டனர். நீதிமன்ற வளாகம் முழுக்க சுமார் நூற்றுக்கும் அதிகமான ஆயுதம் ஏந்திய பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சவூதியிலிருக்கும் சாகிர் நாயக்குக்கு அமுலாக்கத்துறை பிடியாணை



(திருச்சி சாஹுல் அமீது)

சவூதி அரேபியாவில் தங்கியிருக்கும் சாகிர் நாயக் விசாரணைக்கு ஆஜராகுமாறு ஏற்கனவே 3 முறை பிடியாணை அனுப்பி இருந்தது. மும்பையை மையமாக கொண்ட மதபோதகரும், 'இஸ்லாமிக் ஆய்வு அறக்கட்டளை' நிறுவனருமான ஜாகிர் நாயக் மீது சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டம் மற்றும் இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு உள்ளது. மேலும் அவரது அறக்கட்டளைக்கும் தடை விதிக்கப்பட்டு உள்ளது.தற்போது சவூதியில் தங்கியிருக்கும் சாகிர் நாயக் மீது நிதி மோசடி தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ள அமுலாக்கத்துறை, இது தொடர்பான விசாரணைக்கு ஆஜராகுமாறு ஏற்கனவே 3 முறை சம்மன் அனுப்பி இருந்தது. ஆனால் இது வரை அவர் ஆஜராகவில்லை.

தான் இந்தியா வந்தால் கைது செய்யப்பட வாய்ப்பு இருப்பதால், இணையதள காணொளி மூலம் இந்த விசாரணையில் பங்கேற்க அனுமதிக்குமாறு கடந்த சில நாட்களுக்கு முன் அவர் வேண்டுகோள் விடுத்து இருந்தார். இதை நிராகரித்த அமுலாக்கத்துறை அதிகாரிகள், நேரில் ஆஜராகுமாறு 4ஆவது முறையாக மீண்டும் சம்மன் அனுப்பினர்.

இந்த பிடியாணை அவரது வழக்கறிஞர்கள் மூலமும், ஈ-மெயில் மூலமும் சாகிர் நாயக்குக்கு அனுப்பி வைத்தனர். இதுவே கடைசி பிடியாணையாக இருக்கும் என்று கூறியுள்ள அதிகாரிகள், இனியும் அவர் ஆஜராக தவறினால் நீதிமன்றம் மூலம் பிடியாணை பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தனர்.

# ஆப்கானில் தலிபான் தாக்குதல்: பொலிஸார் 24 பேர் உயிரிழப்பு



ஆப்கானிஸ்தானில் லஸ்கர்கா நகரில், சோதனைச்சாவடி ஒன்றின்மீது தலிபான்கள் நடத்திய தொடர் தாக்குதலில் 24 பொலிஸார் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் கொட்டத்தை அடக்கும் முயற்சியில் உள்நாட்டுப்படைகளுக்கு அமெரிக்க கூட்டுப்படைகள் பக்கபலமாக இருந்து வருகின்றன.

இந் நிலையில் அங்கு ஹெல்மாண்ட் மாகாணத்தின் தலைநகரமான லஸ்கர்கா நகரில், சோதனைச்சாவடி ஒன்றின்மீது தலிபான்கள் நேற்றுமுன்தினம் அதிகாலை ஒலியடக்கி துப்பாக்கிகளையும், கையெறிகுண்டுகளையும் பயன்படுத்தி மிகக்கடுமையான தாக்குதல்களை நடத்தினர். இந்த தாக்குதலில் 12 பொலிஸார் உயிரிழந்தனர். பலர் காயம் அடைந்தனர்.

இத் தாக்குதலைத் தொடர்ந்து, அங்கிருந்த ஆயுதங்களையும், வெடிபொருட்களையும் தலிபான்கள் கொள்ளையடித்து சென்றுள்ளனர். சோதனைச்சாவடி தரப்பிலிருந்து யாரோ ஒருவர் தலிபான் பக்கம் சாய்ந்து, இந்த தாக்குதலுக்கு வழிவகுத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்று அங்குள்ள மர்ஜா மாவட்டத்தில் பொலிஸாருக்கும், தலிபான்களுக்கும் இடையே பயங்கர துப்பாக்கிச்சண்டை நடந்தது. ஒரு மணி நேரம் நீடித்த இம் மோதலில் 12 பொலிஸார் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதை தலிபான்களின் செய்தி தொடர்பாளர் ஜபிகுல்லா முஜாஹித் தெரிவித்தார்.

தற்போது தலிபான்கள், ஆப்கானிஸ்தானில் ஹெல்மாண்ட் மாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளை தங்களது கட்டுப்பாட்டின்கீழ் வைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

506 தொன் பொதியுடன்

# இந்தோனேசியா செல்லும் சவூதி மன்னர் சல்மான்



சவூதி மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல் சவூத் 9 நாட்கள் அரசு முறைப் பயணமாக இந்தோனேசியாவுக்குச் செல்லவுள்ளார்.

அவருடைய பயணத்துக்காக மட்டும் 506 டொன் எடையுள்ள பொதிகள் இந்தோனேஷியாவுக்குக் கொண்டு செல்லப்படவுள்ளன.

அப் பொதியில் இரண்டு எஸ்600 ரக பென்ஸ் கார்கள், மற்றும் இரண்டு 'லிப்ட்'கள் கொண்டு செல்கிறார். சவூதி மன்னரின் பொதிகளை கையாள்வதற்கு தனியார் நிறுவனமொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அந்த நிறுவனத்தின் சார்பில் பொதிகளை கையாள்வதற்கு 572 ஊழியர்களை நியமித்துள்ளனர்.

சவூதி அரேபிய வரலாற்றில் அப்துல் அஸீஸ் சுமார் 46 ஆண்டுகள் கழித்து, இந்தோனேசியாவுக்குச் செல்லும் முதல் மன்னர் என்பதோடு, மன்னரின் இந்தோனேசியப் பயணத்தில், அவருடன் சேர்ந்து 10 அமைச்சர்கள், 25 இளவரசர்கள், 110 பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட 1,500 பேர் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போராளிகளுக்கு மருத்துவ பயிற்சியளிக்க

# துப்பாக்கிமுனையில் செவிலியர்களை கடத்திச் சென்ற ஐ.எஸ். தீவிரவாதிகள்



லிபியாவில் அரசுப் படையினருடனான மோதலில் காயமடையும் தமது அமைப்பின் போராளிகளுக்கு சிகிச்சை அளிக்கப் பயிற்சி கொடுப்பதற்காக செவிலியர்களை துப்பாக்கி முனையில் மிரட்டி ஐ.எஸ் தீவிரவாதிகள் அழைத்துச் சென்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ் தீவிரவாதிகள், அண்டை நாடான லிபியாவிலுள்ள சிர்டே பகுதி முழுவதையும் கடந்த 2015ஆம் ஆண்டில் தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அப்பகுதியில் உள்ள மருத்துவமனைகளில் பிலிப்பைன்ஸைச் சேர்ந்த செவிலியர்கள் அதிகமானோர் பணியாற்றி வந்துள்ளனர். இதனால், போரில் படுகாயமடையும் தீவிரவாதிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக மருத்துவமனைகளில் பணியாற்றிய செவிலியர்களை கட்டாயப்படுத்தி துப்பாக்கி முனையில் மிரட்டி அழைத்துச் சென்றதாக அவர்கள் பிடியிலிருந்து தப்பி வந்த செவிலியர்கள் தற்போது தெரிவித்துள்ளனர்.

மேலும், கடத்தப்பட்ட செவிலியர்களில் முஸ்லிம்கள் இருந்தால் அவர்களை நிபந்தனைகளுடன் அங்கு தங்க வைத்திருந்ததாகவும், அவசர தேவையின் போது அங்குள்ள போராளிகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கும் பயிற்சிகளை கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் தப்பி வந்துள்ள செவிலியர்கள் தெரிவித்துள்ளனர்.

சிர்டே பகுதியில் கடந்தாண்டு அரசுப்படையினருடன் ஏற்பட்ட ஐ.எஸ் அமைப்பினர் கடுமையாக பாதிக்கப்பட்டு பின்வாங்கி விட்டனர். இதனால், அவர்களது கட்டுப்பாட்டிலிருந்த செவிலியர்கள் மற்றும் மருத்துவர்கள் அவர்களது சொந்த நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்தியாவைச் சேர்ந்த மருத்துவர் ராமமூர்த்தி கோசனம் என்பவரும் ஐ.எஸ் அமைப்பினரின் கட்டுப்பாட்டில் இருந்து தற்போது தப்பி வந்துள்ளார். போர் நடக்கும் பகுதிகளில் ஐ.எஸ் அமைப்பினர் மருத்துவமனைகளை நடத்தி வந்ததாகவும், அங்கு கை, கால்களை இழந்த தீவிரவாதிகளுக்கு தான் சிகிச்சை அளித்ததாகவும் ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

# கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்கள் காலவரையறையற்ற பணி பகிஷ்கரிப்பு

(ஏறாவூர் நிருபர் -ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

கடந்த செவ்வாய்க்கிழமை (28) திருகோணமலை வளாகத்தில் கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்களையும் நிருவாக உத்தியோகத்தர்களையும் வீடுகளுக்குச் செல்லவிடாது திருமலை வளாக மாணவர்கள் சிறைப்பிடித்து தடுத்தமையைக் கண்டித்தும் இச்சம்பவத்திற்கு நீதிகோரியும் கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்க அங்கத்தவர்கள் சுமார் 460 பேர் காலவரையறையற்ற பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதாக அறிவித்துள்ளனர்.

புதன்கிழமை நண்பகல் தொடக்கம் இந்தப் பணிப் புறக்கணிப்பில் தாங்கள் இணைந்து கொண்டுள்ளதாக கிழக்குப் கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்க செயலாளர் தங்கவேல் ஸ்ரீதரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும், தெரிவித்த அவர்,

கடந்த செவ்வாய்க்கிழமை திருகோணமலை வளாகத்தில் இடம்பெற்ற விரும்பத்தகாத செயற்பாட்டின் விளைவாக ஊழியர்களான பாலூட்டும் தாய்மார்கள் வெளியில் செல்ல முடியவில்லை. தங்கள் குழந்தைகளை பின்னேர வகுப்புகளுக்கு கொண்டு செல்ல முடியவில்லை, ஊழியர்களில் சிலர் மருத்துவ ஆலோசனைகளுக்கு முன் அனுமதி எடுத்தும் வைத்திய சாலைகளுக்கு செல்ல முடியவில்லை. இரவு நேர போசனம் எடுக்க முடியவில்லை. இது போன்ற நடவடிக்கைளை தடுத்தமையானது அப்பட்டமான மனித உரிமை மீறல்களாகும்.

இது தொடர்பில் பொலிசாருக்கு உரிய நேரத்தில் தெரிவித்திருந்தும் அவர்கள் ஊழியர்களை வெளியில் கொண்டுவருவதற்கு ஆறு மணித்தியாலங்களுக்கு மேல் எடுத்துக் கொண்டது பொலீஸார் மீது எமக்குள்ள நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளது.

இதனால், கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கல்வி சாரா ஊழியர்களை உபாதைக்குள்ளாக்கியமைக்கு கிழக்குப் பல்கலைக் கழக ஊழியர் சங்கம் கண்டனத்தையும் விசனத்தையும் வெளியிட்டுள்ளதுடன், இதற்கெதிரான நடவடிக்கை எடுக்கப்படும் வரை காலவரையறையற்ற பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இது விவகாரம் தொடர்பாக ஆராயும் ஊழியர் சங்கத்தின் விசேட கூட்டம் புதன்கிழமை வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெற்றதை அடுத்து தொழில் சங்க நடவடிக்கையினை 01.03.2017 (புதன்கிழமை) முதல் முன்னெடுப்பதென்றும், திருமலை வளாகத்தின் முன்னால் வியாழக்கிழமை (02.03.2017) கண்டன ஆர்ப்பாட்டத்தினை நடத்துவதென்றும் தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

எதிர்காலங்களில் இவ்வாறான விரும்பத் தகாத அநாகரிகமான சம்பவம் இடம் பெறாமல் இருக்க உரிய முறையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தக்க தண்டனையை தயங்காமல் வழங்க உயர் மட்ட நிருவாகம் முன்வர வேண்டும் என்பதை வற்புறுத்தியும் எமது திருகோணமலை வளாக சங்க உறுப்பினர்கள் 37 பேர் காலவரையற்ற பணிப்புறக்கணிப்பை மேற்கொள்வதோடு வந்தாறுமூலை வளாகத்திலுள்ள 385 பேரும் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்திலுள்ள 39 பேரும் நேற்று நண்பகல் 12 மணியிலிருந்து பணிப்பகிஸ்கரிப்பை மேற்கொள்கின்றார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

# கண்டி வாவிக்கரையருகில் தேரர் சத்தியாக்கிரகம்



(வத்துகாமம் நிருபர்)

கண்டி ஸ்ரீ தலதா மாளிகை முன் வாவிக் கரைக்கு அருகில் பௌத்த தேரர் ஒருவர் நேற்று அதிகாலை முதல் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டார்.

மேற்படி தேரர் சத்தியா கிரகத்தில் ஈடுபட்டுள்ளதுடன் பிரசுரங்கள் பலவற்றையும் காட்சிப்படுத்தியுள்ளார்.

அப் பிரசுரங்கள் மூலம் கடந்த 2014.12.20 ம் திகதி தெல்தெனியாவில் இடம் பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்களுக்கு ஆசி வழங்கியதால் சிலர் தம்மை துன்புறுத்துவதாகவும் தனது விஹாரைக்கு தீ வைத்து சேதப்படுத்தியதாகவும், தன்னை கடுமையாக தாக்கி காயப்படுத்தியதாகவும் கூறும் பௌத்த தேரர் தாம் விஹாரைக்கு செல்லும் வழியையும் அடைத்து தடை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கின்றார்.

மேற்படி சட்டவிரோத இடையூறு செயல்களில் இன்னொரு தேரர் உற்பட சிலரும் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து தமக்கு நியாயம் பெற்றுத் தருமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு சத்தியாகிராகத்தில் ஈடுபட்டுள்ளவர் திகனை கந்தே விஹாரையை சேர்ந்த இசுருபுர சித்தாரத்;த தேரர் ஆவார்.

நேற்று மாலை ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்கள் தலதா மாளிகைக்கு வருகை தரவிருக்கையில் இத் தேரர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மத்திய வங்கி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை மத்திய வங்கியின் அரச கடன் திணைக்களத்தினையும் அங்குள்ள அதி இரகசியமான பிணை முறி உண்டியல் ஏலவிற்பனை அறையை பிணைமுறை தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக்குழு உறுப்பினர்கள் நேற்று பார்வையிட்டனர்.

நேற்றுக் காலை 8 மணி முதல் 11.30 வரை சுமார் நாலரை மணி நேரம் இவர்கள் சட்டத்தரணிகளுடன் குறிப்பிட்ட அறையைக் கண்காணித்தனர்.

நேற்றுகாலை இடம் பெற்ற பிணை முறி ஏலவிற்பனை தொடர்பாக விளங்கிக் கொள்வதற்கே இந்த விஜயத்தை மேற்கொண்டனர்.

# இலங்கை மனித உரிமை தொடர்பில் பிரித்தானிய பாரளுமன்றில் விவாதம்

இலங்கையின் மனித உரிமைகள் நிலை தொடர்பாக பிரித்தானிய நாடாளுமன்றத்தில் நேற்று சிறப்பு விவாதம் ஒன்று இடம்பெற்றது. இதில் இலங்கை வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று காரசாரமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் தலைவரான கன்சர்வேட்டிவ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜேம்ஸ் பெரி இந்த விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.

சிறிலங்காவில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும், 2015ஆம் ஆண்டு சிறிலங்கா அரசாங்கம் வழங்கிய பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் பாதுகாப்புஇ நல்லிணக்கம் தொடர்பான வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று அவர் கரிசனை வெளியிட்டார்.

போர்க்குற்றங்கள் தொடர்பான நீதிப் பொறிமுறைகளை உருவாக்குவது குறித்த காலஅட்டவணை எதையும் சிறிலங்கா கொண்டிருக்கவில்லை என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

இந்த விவாதத்தின் போது, போர்க்குற்றங்கள் தொடர்பான நீதிப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்குவதற்கு சிறிலங்கா மறுப்புத் தெரிவித்து வருவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

வெளிநாட்டு நீதிபதிகள், சட்டவாளர்கள், வழக்குத் தொடுனர்களை அனுமதிக்க முடியாது என்று இலங்கை ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் தெளிவான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். அவர்கள் முற்றிலும் உள்நாட்டு பொறிமுறை ஒன்றையே அமைக்கப்போவதாக கூறியுள்ளனர். இலங்கை இராணுவத்தைப் பாதுகாப்போம் என்று மூத்த அமைச்சர்கள் கூறியுள்ளனர் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜேம்ஸ் பெரி சுட்டிக்காட்டினார்.

# நாட்டுப்பற்றாளர் பிரகடனத்தில் ஜனாதிபதி நேற்று கைச்சாத்து

ஏகாதிபத்தியவாதிகளால் தேசத்துரோகிகள் என முத்திரை குத்தப்பட்டவர்களை உண்மையான நாட்டுப்பற்றுள்ளவர்களாக பிரகடனப்படுத்தும் வர்த்தமானியில் ஜனாதிபதி நேற்று கையொப்பமிட்டார்.

1918ம் ஆண்டு ஊவ வெல்லஸ்ஸ புரட்சியில் கலந்துகொண்டதனால் மரண தண்டனை விதிக்கப்பட்டு உயிரிழந்த மற்றும் நாடு கடத்தப்பட்ட சுமார் 84 பேர் நாட்டுப்பற்றுள்ளவர்களாக அறிவிக்கும் நிகழ்வு தற்பொழுது கண்டி மகுள் மடுவவில் நடைபெற்று வருகின்றது.

இந்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க இந்த நிகழ்வில் மல்வத்து அஸ்கிரி பீடங்களை சேர்ந்த மகாநாயக்கர்கள், மாகாசங்கத்தினர், சபாநாயகர் தலைமையிலான அமைச்சர்கள் அரச அதிகாரிகள், இந்த வீரர்களின் குடும்பங்களைச்சேர்ந்த அங்கத்தவர்கள் உள்ளிட்டே பலர் கலந்து கொண்டுள்ளனர்.

## ரஞ்சனுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பாராளுமன்ற உறுப்பினர் இந்திக அனுருத்த தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

திவுலப்பிட்டிய பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றதுடன் அதில் பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் இந்திக அனுருத்த, திவுலப்பிட்டிய பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச அரசியல் பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதன் போது மண் அகழ்வு சம்பந்தமாக பிரதியமைச்சருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் இந்திக அனுருத்தவுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டதுடன் அது மோதல் நிலைமைக்கு சென்றது.

இதனையடுத்து அருகில் இருந்தவர்கள் அதனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதன் போது இந்திக அனுருத்த கொலை அச்சுறுத்தல் விடுத்தமையால் தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது எனவும் இதனால், மிரிஹான பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தாகவும் பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க குறிப்பிட்டார்.

## அரசியலமைப்பினை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று காலை இடம்பெற்ற அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த போதே அவர் இக்கருத்தினைக் கூறினார்.

புதிய அரசமைப்பை ஸ்தாபிக்கும் பணிகள் தற்போது மும்முரமாக இடம்பெற்றுவரும் நிலையில் நல்லாட்சி அரசுக்குள் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர், புதிய அரசியலமைப்பொன்று ஸ்தாபிக்கப்படப்போவதில்லை என்றும் மாறாக அரசமைப்பில் திருத்தங்களே மேற்கொள்ளப்படும் என்றும் இதனால் சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லப்போவதில்லை என்றும் கடந்த சில நாட்களாக கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

மக்களிடையே சற்று குழப்பத்தை ஏற்படுத்தியுள்ள இவ்விடயம் குறித்து இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சரிடம் வினவப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அதாவது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்து, தேர்தல் முறைமையில் மாற்றத்தைக் கொண்டுவரும் புதிய அரசியலமைப்பொன்றைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளே அரசினால் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது.

நாம், ஜனாதிபதித் தேர்தலின்போதும் இதனைத் தான் வாக்குறுதியாக மக்களுக்கு வழங்கினோம். இந்நிலையில், இந்த வாக்குறுதியிலிருந்து விடுபட்டு மக்களை ஏமாற்ற நாம் விரும்பவில்லை.

நாம் அப்போது கூறியதுபோல நிச்சயமாக புதிய அரசியலமைப்பொன்றை கொண்டுவருவோம். இதற்காக சர்வஜன வாக்கெடுப்புக்கும் நாம் செல்வோம். இதற்கெல்லாம் தற்போது எதிர்ப்புக்களைத் தெரிவிப்பவர்கள் எவரும் 2015, ஜனவரி மாதம் எம்முடன் இணைந்து போராடியவர்கள் அல்ல. தற்போதும் சிறிய அளவிலானோர் தான் எமது செயற்றிட்டங்களுக்கு எதிர்ப்புக்களை வெளியிட்டு வருகின்றனர். இவையெல்லாம் புதிய அரசியலமைப்பை ஸ்தாபிக்கும் பணிகளை பாதிக்காது என்றார்.

## வெலிக்கடை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அரசினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும் என்று அரசு நேற்று குறிப்பிட்டது.

அத்தோடு இதில் பலியான 16 பேருக்கு தலா 20 இலட்சம் ரூபா வீதமும் காயமடைந்த 20 பேருக்கு தலா 5 இலட்சம் ரூபா வீதமும் நஷ்ட ஈடுவழங்கப்படும் எனவும் அது தெரிவித்தது.

மேற்படித் தாக்குதல் சம்பவத்தை விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழுவின் அறிக்கைக்கு இணங்க கொல்லப்பட்ட 27 பேரில், 11 பேர் தப்பிச் செல்ல முயற்சித்தபோது இறந்துள்ளமை தெரியவந்தமையால் 16 பேருக்கு மட்டுமே தலா இருபது இலட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது என்றும் அரசு சுட்டிக்கட்டியது.

இதுதொடர்பில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டி.எம். சுவாமிநாதனினால் கொண்டுவரப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கும் அனுமதி கிடைத்துள்ளது.

மேற்படித் தகவலை அரச தகவல் திணைக்களத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற அமைச்சரவையின் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு தெரிவித்த அமைச்சர் ராஜித சேனாரட்னவிடம், வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற இத்தாக்குதல் தொடர்பிலான அறிக்கை எப்போது வெளியிடப்படும் என்று கேட்கப்பட்டது.

இதற்கு, அறிக்கையானது தற்போது அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் வெகுவிரைவிலேயே வெளியிடப்படும் என்றும் கூறினார். அத்தோடு, இச்சம்பவத்தை முன்னாள் அரசு திட்டமிட்டுத் தான் செய்துள்ளது என்றும் அவர் பகிரங்கமாகக் கூறினார்.

## கேப்பாபுலவு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நேற்று திறக்கப்பட்டமையால் மக்கள் ஆர்வத்துடன் அவரவர் காணியைப் பார்வையிட்டனர்.

கடந்த 8 வருடங்களாக விமானப்படையின் கீழ்; இருந்துவந்த இந்தக் காணிகளை விடுவிக்குமாறு அரசுக்கு அழுத்தம் விடுத்து, ஜனவரி 31 ஆம் திகதி முதல் கேப்பாப்புலவு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவந்தனர்.

நாடளாவிய ரீதியில் பெரும் பேசுபொருளாக மாறிய இந்தப் போராட்டத்துக்கு உரிய தீர்வினை வழங்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் போன்ற அரசியற் கட்சிகள், சிவில் அமைப்புக்கள், மாணவர் அமைப்புக்கள் என்பனவும் அரசுக்கு தொடர் அழுத்தங்களை பிரயோகித்தன.

எனினும், இந்தக் காணியில் வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு உரித்தான காணியும் இருப்பதாகக் குறிப்பிட்ட அரசோ, மிகவிரைவிலேயே காணிகளை உரிய வகையில் தனித்தனியே அடையாளம் கண்டு மக்களுக்கானத் தீர்வினை வழங்குவோம் என்று அறிவித்திருந்து.

இதற்கிணங்க, நேற்று முற்பகல் 84 குடும்பங்களுக்குச் சொந்தமான சுமார் 41.52 ஏக்கர் காணியானது நில அளவையாளர் திணைக்கள அதிகாரிகளின் அளவீட்டினை அடுத்து விடுவிக்கப்பட்டது.

எனினும், இக்காணிகளை மாவட்ட அரச அதிபரிடம் கையளிக்கும்வரை யாரையும் உட்பிரவேசிக்க வேண்டாம் என இராணுவத்தினர் தெரிவித்துள்ளதாகவும் இதனால் கோப்பாடபுலவு கிராமமானது தொடர்ச்சியாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் தான் இருந்து வருகின்றது என்றும் அறியக்கிடைத்துள்ளது.

கேப்பாப்புலவில் காணப்படும் நான்கு கிராமங்களில் சீனியாமோட்டை, சூரிபுரம் ஆகிய கிராமங்களின் காணிகள் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் தான் நேற்று முற்பகல் புலவுக்குடியிருப்புக் காணியும் விடுவிக்கப்பட்டது.

அதேநேரம், அனுமதிப்பத்திரமுள்ள 9 காணிகள் தொடர்ச்சியாக இராணுவத்தின் வசமுள்ளமையால் மக்கள் இன்னமும் தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

0.48 ஏக்கர் அளவிலான இக்காணியில் 17 குடும்பங்களுக்குச் சொந்தமான காணிகளும் 7 குடும்பங்களுக்குச் சொந்தமான அறைவாசிக் காணிகளும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளமைக் குறிப்பிடத்தக்கது.

## அநீதியை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஹஸன் அலி நவமணிக்குத் தெரிவித்தார்.

சில தினங்களுக்கு முன் புனித மக்கா சென்று உம்ராவை நிறைவேற்றிவிட்டு தாயகம் திரும்பிய ஹஸன்அலி, செயலாளர் பதவியிலிருந்து அகற்றப்பட்டதனையடுத்து முதன்முறையாக நாளை அம்பாறை மாவட்டத்திற்குச் செல்கிறார்.

தனக்கு ஏற்படுத்தப்பட்ட அநீதியை கிழக்கு மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்கான பல கூட்டங்களை நடத்த தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை, அது 1996இல் ஸ்தாபிக்கப்பட்ட போது இருந்த போராட்டக் கட்சியாக மாற்றுவதற்கான முன்னெடுப்புக்களை முன்னெடுக்கப் போவதாகவும் கிழக்குக்கு செல்வதற்கு முன் 'நவமணி'க்களித்த பேட்டியில் தெரிவித்தார்.

இதேநேரம் முன்னாள் சுகாதார ராஜாங்க அமைச்சர் ஹஸன் அலி செவ்வாயன்று ஜாவத்தைப் பள்ளிவாசலுக்கு விஜயம் செய்து, அங்கு அடக்கப்பட்டிருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அடக்கஸ்தலத்திற்குச் சென்று விசேட பிராத்தனையிலீடுபட்டுள்ளார்.

## மூன்று...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சிகிச்சைகளுக்காக அமெரிக்கா சென்றிருந்த பஷில் ராஜபக்ஷ நேற்று முன் தினம் நாடு திரும்பினார்.

நாடு திரும்பிய மறுதினமே கூட்டு எதிர்க்கட்சியின் முக்கிய கூட்டங்கள் பலவற்றிலும் கலந்து கொண்ட அவர், நேற்று முஸ்லிம் முற்போக்கு முன்னணித் தலைவர்களை பத்தரமுல்லை நெலும் மாவத்தையிலுள்ள அலுவலகத்தில் சந்தித்தார்.

தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் தம் கட்சிப் பிரசாரங்களை முன்னெடுப்பது தொடர்பாக முஸ்லிம் அமைப்பாளர்களுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

அரசாங்கம் எப்படிக் கூறினாலும் மூன்று மாதங்களுக்குள் தேர்தலை நடத்த நிர்ப்பந்திக்கப்படும் சர்வதேச அழுத்தத்திலிருந்து அரசுக்கு மீள முடியாது. நாம் கூட வட மாகாணசபைத் தேர்தலை நடத்தியது சர்வதேச அழுத்தம் காரணமாகவே என்றும் பஷில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எமது கட்சிக்கு தமிழ், முஸ்லிம் ஆதரவு பூச்சியம் நிலையிலிருந்தது. இப்போது மக்கள் உண்மையை உணர்ந்துள்ளதனால் ஆதரவு அதிகரித்து வருகின்றது. இதற்காக அடிமட்டத்திற்கு விஜயம் செய்வது அவசியம் என்றும் பஷில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 17,18,19 ஆம் திகதிகளில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கட்சியின் தூதுக்குழு ஒன்று விஜயம் செய்து கட்சி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலதிபர் ஏ. எச். எம். அஸ்வர், மேல் மாகாண சபை உறுப்பினர் சகாவுல்லா, முன்னணியின் தேசிய அமைப்பாளர் அப்துல் சத்தார், நகீப் மௌலானா, பாணந்துறை பிரதேசசபை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் கிபாஸ், மல்வானை பிரமுகர் இஸ்மாயில் ஹாஜி, நுகுன் நிஸாம் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## காணி, பொலிஸ்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நடைபெற்ற இலங்கை தேசிய சபையின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய பிரச்சினைக்கு தீர்வு பற்றி பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் புதிய அரசியலமைப்பொன்றின் மூலம் காணி மற்றும் தமிழ் பேசும் பொலிஸ் அலகுகள் பற்றியும் பேசி வருகின்றனர். இதில் தாமும் உடன்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும். அதற்கான தேசிய கொள்ளையொன்றிருக்கும்போதே வறியவர்கள் தமது இடங்களைப் பெற்றுக்கொள்வார்கள். மாறாக, செல்வந்தர்களோ, அரசியல்வாதிகளோ அல்ல. முன்னாள் பிரதமர் டீ.எஸ்.சேனாநாயக்க மகவலி காணிகளை பகிர்ந்தளித்ததைப் போன்று எந்தவொரு தலைவரும் இது வரையில் செய்யவில்லை. முப்படைகளின் கட்டுப்பாடு மத்திய அரசாங்கத்தின் கையில் இருக்கவேண்டும். யுத்தம் நிறைவடைந்துள்ளதால் வடக்கு மக்களுக்கு சுய அதிகாரமும், பொலிஸ் அதிகாரமும் வழங்கப்படவேண்டும்.

# Sports
விளையாட்டுச் செய்திகள்

## இலங்கை- பங்களாதேஷ் டெஸ்ட் கிரிக்கெட் தொடர்:

பீ.எப்.எம் றிஷாட்

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்குமிடையிலான 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 7 ஆம் திகதி காலியில் ஆரம்பமாகவுள்ளது. இதன்படி, எதிர்வரும் 15ஆம் திகதி பி.சரவணமுத்து மைதானத்தில் நடைபெறவுள்ள 2ஆவது டெஸ்ட் போட்டி பங்களாதேஷ் அணி பங்குபற்றும் 100ஆவது டெஸ்ட் போட்டி என்பது சிறப்பம்சமாகும். எனினும், இவ்விரு அணிகளுக்குமிடையில் இதுவரை 16 டெஸ்ட் போட்டிகள் இடம்பெற்றுள்ளதுடன், இதில் 14 போட்டிகளில் இலங்கை அணி வெற்றிபெற்றுள்ளதுடன், 2 போட்டிகள் சமநிலையில் நிறைவடைந்தன. இதேவேளை, இலங்கை அணியின் தலைவர் மெத்யூஸ் உபாதைக்குள்ளாகியுள்ள நிலையில், அணியில் உள்ள அனுபவமிக்க வீரரான 38 வயதுடைய ரங்கன ஹேரத் தலைவராக செயற்படவுள்ளார். அத்துடன், புதுமுக வீரரான மலிந்த புஷ்பகுமாரவுக்கு டெஸ்ட் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள அதேநேரம், தென்னாபிரிக்க மற்றும் அவுஸ்திரேலிய தொடர்களில் திறமைகளைப் வெளிப்படுத்திய நிரோஷன் திக்வெல்ல மற்றும் அசேல குணரத்ன ஆகியோருக்கும் டெஸ்ட் அணியில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.



### பங்களாதேஷ் அணியை குறைத்து மதிப்பிட முடியாது ரங்கன ஹேரத்

அண்மைக்காலமாக கிரிக்கெட் உலகில் வெற்றிகளைப் பெற்றுவரும் பங்களாதேஷ் அணியை ஒரு போதும் குறைத்து மதிப்பிட முடியாது. எனினும், பங்களாதேஷ் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றும் நம்பிக்கை எமக்குள்ளதென இலங்கை டெஸ்ட் அணியின் தலைவர் ரங்கன ஹேரத் தெரிவித்தார். தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், பங்களாதேஷ் அணிக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை நாம் கைப்பற்றுவோம் என்ற நம்பிக்கை உள்ளது. துடுப்பாட்ட பலம் எமது அணியில் மிகவும் வலிமையாகவுள்ளது. எமது அணியைப்பற்றி அவர்கள் நன்கு தெரிந்து வைத்துள்ளனர். ஏனெனில் இலங்கையைச் சேர்ந்த 3 பயிற்றுவிப்பாளர்கள் பங்களாதேஷ் அணிக்கு பயிற்சியளித்துள்ளனர். குறிப்பாக பங்களாதேஷ் அணியின் தற்போதைய பயிற்றுவிப்பாளர் ஹத்துருசிங்க மிக முக்கியமானவர். அவருடன் நான் சுமார் 10 வருடங்கள் பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டுள்ளேன். இதனால் இத் தொடர் எமக்கு மிகவும் சவாலாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன். ஏனைய அணிகளின் பயிற்றுவிப்பாளர்களைவிடவும் ஹத்துருசிங்கவிடம் எம்மைப்பற்றிய தரவுகள் அதிகம் இருக்கும்.

### இலங்கை அணியை வீழ்த்தி எமது பலத்தை நிரூபிப்போம் முஷ்பிகுர் ரஹிம்

அண்மைக்காலமாக எமது அணி அனைத்துவகையான கிரிக்கெட் போட்டிகளிலும் சிறப்பாக விளையாடிவருகின்றது. எனவே இத்தொடரில் இலங்கை அணிக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் நாம் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, கிரிக்கெட் உலகில் பங்களாதேஷ் அணியின் பலத்தை நிரூபிக்கவுள்ளோம் என பங்களாதேஷ் கிரிக்கெட் அணித் தலைவர் முஷ்பிகுர் ரஹிம் தெரிவித்தார். அத்துடன், இலங்கை அணியில் குமார் சங்கக்கார, மஹேல ஜயவர்தன, திலகரத்ன டில்ஷான் மற்றும் முத்தையா முரளிதரன் போன்ற வீரர்கள் தற்போது இல்லாமை எமக்கு சாதமாக அமையும் என எதிர்பார்க்கிறோம். அதேவேளை, பங்களாதேஷ் அணி திறமைகளை வெளிப்படுத்திய காரணத்தால் நிச்சயம் இத்தொடரை வெல்வோம் என்றார். மேலும் எமது பயிற்றுவிப்பாளர்கள் இலங்கை அணியின் முன்னாள் வீரர்கள் என்பதால் நிச்சயம் இங்குள்ள ஆடுகளம் தொடர்பில் தெளிவொன்றைப் பெற்று இலங்கை அணியை வீழ்த்துவதற்கு தயாராகவுள்ளோம். இலங்கை அணி அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக அண்மையில் இடம்பெற்ற டெஸ்ட் தொடரில் மிகவும் திறமையாக செயற்பட்டது. டெஸ்ட் போட்டிகளில் முதலாம் நிலையில் இருந்த அவுஸ்திரேலிய அணியை சொந்த மண்ணில் வெள்ளையடிப்புச் செய்திருந்தது. எவ்வாறு இருப்பினும் இலங்கை அணிக்கு எதிரான இந்தத் தொடரை அனைத்து துறைகளிலும் கவனம் செலுத்தி வெற்றிபெறுவதற்கு முயற்சிசெய்வோம் என்றார்.

## அசேல மற்றும் சீக்குகேவுக்கு இராணுவத்தில் பதவி உயர்வு



பீ.எப்.எம் றிஷாட்

இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களான அசேல குணரத்ன மற்றும் சீக்குகே பிரசன்ன ஆகியோருக்கு இலங்கை இராணுவத்தினால் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய சீக்குகே பிரசன்ன ஆணைப்பத்திரம் வழங்கும் அதிகாரி தரம் I, அசேல குணவர்தன ஆணைப்பத்திரம் வழங்கும் அதிகாரி தரம் II, ஆகிய நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளனர். இந்நிலையில், இப்பதவி உயர்வுகளை வழங்குவதற்கான சிறப்பு நிகழ்வு நேற்று மாலை இராணுவ தலைமையகத்தில் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா தலைமையில் நடைபெற்றது.

இலங்கை இராணுவத்திலிருந்து தேசிய கிரிக்கெட் அணிக்குள் இடம்பெற்ற சகலதுறை வீரர்களான இராணுவ போர் உபகரணங்கள் படைப்பிரிவைச் சேர்ந்த சிக்குகே பிரசன்ன மற்றும் இராணுவ பீரங்கிப் படைப் பிரிவைச் சேர்ந்த அசேல குணவர்தனவின் பதவிகளை உயர்த்துவதற்கு இலங்கை இராணுவம் நடவடிக்கை எடுத்திருந்தது.

இதன்படி 2003ஆம் ஆண்டு இராணுவத்தில் இணைந்த சிக்குகே பிரசன்ன, தேசிய கிரிக்கெட் அணியில் 2011ஆம் ஆண்டு அறிமுகமானார். கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற இராணுவ வர்ண விருதுகள் வழங்கும் விழாவில் 2016ஆம் ஆண்டிற்கான சிறந்த வீரருக்கான விருதை சீக்குகே பிரசன்ன பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை அண்மையில் தென்னாபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலியாவுடனான தொடர்களில் தனது துடுப்பாட்ட திறமையை சிறந்த முறையில் வெளிப்படுத்திய அசேல குணவர்தன இராணுவத்தின் வொரன்ட் அதிகாரி தரம் இரண்டுக்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இவர் கடந்த 2007ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தில் இணைந்துகொண்டுள்ளதுடன், அன்றிலிருந்து சுமார் 10 வருடங்களாக இராணுவ கிரிக்கெட் அணியிலும் இடம்பெற்றிருந்தார். இந்நிலையில் கடந்த வருடம் நவம்பர் மாதம் சிம்பாப்வே அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமானார். அதனடிப்படையில், சீக்குகே பிரசன்ன மற்றும் அசேல குணவர்தன ஆகியோரை இனங்கண்டிருந்தது. இதற்கு முன் சுழற்பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸை இலங்கை கிரிக்கெட் அணி அடையாளம் கண்டிருந்தது.







## இலங்கை ஏ அணியில் திசர, குசலுக்கு வாய்ப்பு



பீ.எப்.எம் றிஷாட்

இலங்கை ஏ அணிக்கும் இங்கிலாந்து லயன்ஸ் கிரிக்கெட் அணிக்குமிடையில் இன்று ஆரம்பமாகவுள்ள 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் இலங்கை அணியின் அதிரடி ஆரம்ப துடுப்பாட்ட வீரர் குசல் ஜனித் பெரேராவும், சகலதுறை ஆட்டக்காரருமான திசர பெரேரா ஆகியோர் இலங்கை ஏ அணியில் இடம்பெற்றுள்ளனர்.

இங்கிலாந்து லயன்ஸ் கழகத்துடன் இடம்பெற்ற 2 போட்டிகளைக் கொண்ட 4 நாள் டெஸ்ட் போட்டி 1க்கு 1 என சமநிலையில் நிறைவடைய, தம்புள்ள கிரிக்கெட் மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ள ஒருநாள் போட்டித் தொடர் விறுவிறுப்பாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. இந்நிலையில், மிலிந்த சிறிவர்தன தலைமையிலான இலங்கை ஏ அணியில் குசல் பெரோ மற்றும் திசர பெரேரா ஆகியோரை இணைத்துக்கொள்ள தெரிவுக்குழுவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதில் குறிப்பாக, கடந்த வருடம் அவுஸ்திரேலிய அணிக்கெதிரான ஒருநாள் மற்றும் டி20 போட்டித் தொடரில் மோசமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியிருந்த குசல் மற்றும் திசரவை மீண்டும் இலங்கை அணியில் இணைத்துக் கொள்ளும் முயற்சியாக இப்போட்டித் தொடர் அமையவுள்ளது. அத்துடன், கடந்த வாரம் நிறைவடைந்த இங்கிலாந்து லயன்ஸ் கழகத்துடனான 2ஆவது டெஸ்ட் போட்டியில் இலங்கை ஏ அணியில் அறிமுகமாகி அபாரமாக துடுப்பெடுத்தாடி 185 ஓட்டங்களைக் குவித்த இளம் வீரர் சதீர சமரவிக்ரமவுக்கும் ஒருநாள் அணியில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் கடந்த 2016ஆம் ஆண்டு இரவு நேர விடுதியொன்றில் தகராறில் ஈடுபட்டு போட்டித்தடைக்குள்ளாகி மீண்டும் உள்ளூர் போட்டிகளில் பிரகாசித்துவருகின்ற தமிழ் யூனியன் கழகத்தின் தலைவர் கித்துருவன் விதானகேவுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை ஏ மற்றும் இங்கிலாந்து லயன்ஸ் கழகத்திற்கிடையிலான எஞ்சிய ஒருநாள் போட்டிகள் 04,06,09 மற்றும் 11ஆம் திகதிகளில் தம்புள்ள, குருநாகல் மற்றும் கொழும்பில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கை அணி விபரம் வருமாறு;மிலிந்த சிறிவர்தன(தலைவர்),தனுஷ்ன குணதிலக, சந்துன் வீரக்கொடி, குசல் ஜனித் பெரேரா, சதீர சமரவிக்ரம, ஷெஹான் ஜயசூரிய, சரித் அசலங்க, திசர பெரேரா, கித்துருவன் விதானகே, லஹிரு மதுஷங்க, விகும் சன்ஜய, அசித பெர்னான்டோ, அமில அபோன்ச, மலிந்த புஷ்பகுமார் மற்றும் ஜெப்ரி வெண்டர்சே.

## பாக்.சுப்பர் லீக்கிலிருந்து 3 இங்கி.வீரர்கள் விலகல்

தற்போது நடைபெற்றுவரும் பாகிஸ்தான் சுப்பர் லீக் டி20 போட்டித் தொடரிலிருந்து இங்கிலாந்து வீரர்களான கெவின் பீட்டர்சன், லூக்கி ரைட் மற்றும் டைமல் மில்ஸ் ஆகியோர் விலகவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதிப் போட்டியில் குவேட்டா கிலாடியேட்டர்ஸ் மற்றும் பெஷாவர் சல்மி ஆகிய அணிகள் மோதின. இறுதிவரை பரபரப்பாக இடம்பெற்ற இந்தப் போட்டியில் குவேட்டா கிலாடியேட்டர்ஸ் அணி ஒரு ஓட்டத்தால் த்ரில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்குத் தெரிவானது. இதன்படி, குவாட்டா அணியில் இடம்பெற்ற இங்கிலாந்து வீரர்கள் மூவரும், எதிர்வரும் 5ஆம் திகதி பாகிஸ்தானில் நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக கலந்துகொள்ளப் போவதில்லை என அணி முகாமைத்துவத்துக்கு அறிவித்துள்ளனர். எனவே, இறுதிப் போட்டியில் அவ்வணி பாகிஸ்தான் வீரர்களுடன் களமிறங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## அகில இலங்கை உதைபந்தாட்டம்: கிண்ணியா மத்திய கல்லூரி சம்பியன்





(சஹ்ரின் எம். இஸ்மத்)

அகில இலங்கை பாடசாலை உதைப்பந்தாட்ட சம்மேளத்தினால் நடாத்தப்பட்ட 19 வயது (பிரிவு - 2 இற்கான) உதைப்பந்தாட்ட தேசிய மட்டப் போட்டியில் கிண்ணியா மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

காலி சென் அலோசியஸ் கல்லூரி மைதானத்தில் கடந்த 25,26 ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட இப் போட்டியில் கிண்ணியா மத்திய கல்லூரி, கம்பளை சாஹிரா கல்லூரியுடன் விளையாடி 2-1 எனும் கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அரை இறுதிப் போட்டியில் வென்னப்புவ ஜோசப் வாஸ் கல்லூரியுடன் மோதி 3-1 எனும் கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவானது.

இறுதிப் போட்டியில் கிண்ணியா மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியுடன் விளையாடி 1-0 எனும் கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 2017 ஆம் ஆண்டுக்கான 19 வயதுப் பிரிவு - 2இற்கான கிண்ணத்தைக் கைப்பற்றியது. மாவட்ட மட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 50 பாடசாலைகளுள் தேசிய மட்டப் போட்டித் தெரிவின் போது 16 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன. இதில் 13 பாடசாலைகள் மட்டுமே இறுதிப் போட்டியில் பங்குகொண்டன.

கிண்ணியா மத்திய கல்லூரி அணியின் வெற்றிக்கு கல்லூரியில் கற்பிக்கும் உடற்கல்வி ஆசிரியர்களான என். அரபாத், எம்.எச்.எம். சியாத், எஸ்.எம். ஸக்கிர், எப்.எம். இபாம் மற்றும் பயிற்றுவிப்பாளர் என்.எம். சபான் ஆகியோருக்கு கல்லூரியின் முதல்வர் ஏ. கலீலுள்ளா மற்றும் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

### கப்டிலின் அபார சதம்:

## தென்னாபிரிக்காவை வீழ்த்தி தொடரை சமப்படுத்திய நியூசிலாந்து



தென்னாபிரிக்கா அணிக்கெதிரான நான்காவது ஒருநாள் போட்டியில், கப்டிலின் ருத்ரதாண்டவத்தின் மூலம் நியூசிலாந்து அணி, 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது. இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில் இரு அணியும் 2-2 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது.

ஹெமில்டனில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அதன்படி களமிறங்கிய தென்னாபிரிக்கா அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில், 8 விக்கெட் இழப்புக்கு 279 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. இதில் அணியின் அதிகபட்ச ஓட்டமாக, டிவில்லியர்ஸ் 72 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். பந்துவீச்சில் சமித் படேல் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதைதொடர்ந்து, 280 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய நியூசிலாந்து அணி, மார்டின் கப்டிலின் அதிரடி துடுப்பாட்டத்தின் மூலம் 45 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதன்போது, கப்டில், 138 பந்துகளுக்கு முகங்கொடுத்து ஆட்டமிழக்காது 180 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். அத்தோடு ஆட்டநாயகன் விருதையும் தட்டிச்சென்றார். பந்து வீச்சில் இம்ரான் தாஹிர் 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார். தொடரின் வெற்றியை தீர்மானிக்கும் ஐந்தாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி, எதிர்வரும் 4ஆம் திகதி, ஆக்லாந்தில் நடைபெறவுள்ளது.







மத்தியமுகாம் சாளம்பைக்கேணி அஸ்-ஸிறாஜ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் நேற்றுமுன்தினம் மாலை பாடசாலையின் அதிபர் எஸ்.எம்.எம்.யூசுப் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. இதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், விளையாட்டுத்துறை பிரதி அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இம்முறை சபா இல்லம் (சிவப்பு) 432 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், மர்வா இல்லம் (பச்சை) 415 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், மினா இல்லம் (நீலம்) 376 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. இந்நிகழ்வில் சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர் எஸ்.பீ.திஸ்ஸநாயக்காவின் இணைப்பாளர் வை.எல்.சுலைமாலெப்பை, சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்வி பணிப்பாளர் எம்.எச்.ஏ.ஜாபிர், நாவிதன்வெளி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சரவணமுத்து, சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலக உதவிக் கல்வி பணிப்பாளர் ஏ.முஸ்தாக் அலி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சாளம்பைக்கேணி மத்திய குழுத் தலைவர் ஏ.எம்.மஹ்ரூப், முன்னாள் நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் ஏ.கே.அப்துல் சமட், பிரதி அமைச்சரின் இணைப்புச் செயலாளர்களான நௌபர் ஏ. பாவா, ஐ.எல்.ஹமீட், அல்-அமானா சமூக சேவைகள் அமைப்பின் தலைவர் எம்.பீ.நவாஸ் என பலரும் கலந்து கொண்டனர். (எம்.முஹம்மட் ஜபீர்)

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 02ND MARCH 2017